முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

~வார இதழ்~

முரசு 4 | 29—11—57 வெள்ளி | ஒலி

'முகமூடி' கிழிந்தது!

'பச்சைத் தமிழர்' காமராசரது உண்மை சொருபத்தை, உலகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையில் பெரியார் வெற்றிகரமாக அரசியல் சட்டத்தை நாடெங்கும் எரித்துக் காட்டினர்!

கற்பனை உரையாடல்

"கோதுமையைச் சாப்பிடுங்கள்"—என்று உபதேசம் செய்தார் ஓர் அமைச்சர்! இப்படிச் சொல்லிவிட்டு அவர் இல்லத்திலே சந்தித்த தொல்லைகளையும், ஏற்ற இன்னல்களையும் கற்பனை செய்து கூறுகிறது, இந்தப் பகுதி!

"பசிக்கிறதா? அப்படியானால் புல்லைச் சாப்பிடுங்கள்" என்று பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னால் முழக்கமிட்ட பௌலன் துரையின் வாயிலே புரட்சி காலத்தில் புல்லையே திணித்து தின்ன வைத்தார்கள், பொது மக்கள்!

அதேபோலத்தான் "கோதுமையைச் சாப்பிடுங்கள்" என்று உபதேசம் செய்யும் அமைச்சர் உண்மையிலேயே வீட்டில் கோதுமையைச் சாப்பிட நேர்ந்த விசித்திரக் கதையையும் படியுங்கள்!

அந்தோ, அமைச்சரே!

காட்சி: 1
அமைச்சர் வீடு

அமைச்சர்: "செல்லுதல் யார்க்கும்....சொல்லுதல்...சொல்லுதல்........யார்க்கும்........யார்க்கும்!..." என்னடி ஆச்சு? என்ன, சப்பாத்தி சுட்டுட்டியா?...

அமைச்சர் மனைவி: நீங்க அந்தக் குறளை மனப்பாடம் பண்ணி முடித்தால், நானும் சப்பாத்தி சுட்டு முடித்து விடுவேன்!

அமை: ஐயையோ! அப்படீன்னா உன்னாலே சப்பாத்தி சுடவும் முடியாது! என்னாலே இந்தக் குறளை மனப்பாடம் செய்யவும் முடியாது!

மனைவி: நான் சொல்றேன் கேளுங்க! "சொல்லுதல் யார்க்கும் எளிது!"...அதனால்தான் அசெம்பிளியிலே, "கோதுமை உண்ணுவீர்! குண்டுபோல் ஆகலாம்!" என மிக மிக எளிதாகக் கூறி விட்டீர்கள்! ஆனால், "அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்"! எனவேதான் உங்கள் மனைவியாகிய நான், சப்பாத்தி மாவை அடித்து பிசையக் கூடச் சக்தியில்லாமல் இங்கே திண்டாடுகிறேன்! எதிர்க் கட்சிக்காரர்களை இழிவாகப் பேசுவது எளிது! ஆனால் அவர்கள் எடுத்துக் காட்டும் குற்றச் சாட்டுகளை நீக்குவது அரிது! "குறளைப் படி—குறள் நெறி நட!" எனக் கூறுவது எளிது! ஆனால் அதன்படி நடப்பது அரிது!

அமை: குறள்படி நடப்பது ஒரு புறம் இருக்கட்டும்! இரண்டு நாளாக இந்தக் குறளை மனப்பாடம் செய்கிறேன்...ஊம்... மூளையில் ஏறவே மாட்டேனென்கிறதே! இந்தக் குறள் புத்தகத்தைப்போய் வாங்கி வந்தானே அந்த 307. தி. மு. க. வினரை மட்டந்தட்ட புலவர் குழந்தை உரை வாங்கிக் கொண்டு வரச் சொன்னால், அவன் 'மூர்மார்க்கெட்'டில் கறையான் அரித்துக் கிடந்த இந்தப் பரிமேலழகர் உரையை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறானே! என்ன இவ்வளவு நேரம்? நான் அசெம்பிளிக்குப் போகனும்னு விரும்புகிறாயா? இல்லையா?

மனைவி: போய் எதையோ வெட்டி முறிப்பது போலத்தான்! அங்கே போய் தூங்குவதை இங்கேயே தூங்கித் தொலைத்தால் என்ன?

அமை: அம்மா! ஆளுங் கட்சியினரின் தலைவியே! உன் 'சுடுசொல்' அம்புகள் தாக்க இங்கே எப்படித் தூங்குவது? அங்கே போனாலும், அண்ணாதுரை அழகாக இரண்டு இனிய குறள் கூறுவார்—அதைக் கேட்டுக் கொண்டே மின்சார விசிறியின் காற்றிலே, வெல்வெட் மெத்தை தைத்த நாற்காலியிலே நிம்மதியாகத் தூங்கலாம்!

மனைவி: அசெம்பிளியிலே முன் போலத் தூங்க முடியவில்லை யென்று முன்பு கூறினீர்களே!

அமை: ஆமாம்! அன்று முதுகுளத்தூர் விவாதம் நடந்தது. இனிமேல் எனக்கென்ன கவலை? எல்லாம் சுப்பிரமணியனார் பார்த்துக் கொள்வார்! இன்றிலிருந்து நானும் காமராசர் மாதிரி 'ஹாய்யா' இருக்கப் போகிறேன்! (கடிகாரத்தைப் பார்த்துவிட்டு) அடடே! இந்நேரம் 'கேள்வி நேரம்' முடிந்திருக்குமே! என்ன, இன்னுமா சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டிருக்கே?

மனைவி: இந்த எழவுச் சாப்பாத்தி சுட எனக்குத் தெரியாது!......நீங்கதானே வந்து சுட்டுத் தின்னுட்டுப் போங்க!

அமை: இந்தச் சப்பாத்தி சுடத் தெரியல்லே — பேரன் பேத்தித் தூக்கப் போற காலமாச்சு!

என்னாலே இந்தச் சப்பாத்தி சுடவே முடியாது! அப்படியே சுட்டாலும், அதை இழுத்துக் கடித்துத் தின்ன என்னாலே முடியாது! உங்களுக்கு இன்னும் கொஞ்சம் தொந்தி விழுந்தாலும் பரவாயில்லை! இந்தப் போலீஸ்காரர்களோடு இரண்டு நாள் 'மார்ச்' செய்தால் தொந்தி கரைந்துவிடும்! மேலும் நீங்கள் சிறுவயதிலே 'தோல் பதனிடும் சாலையிலே' இருந்ததாகக் கூறினீர்களே! எனவே இந்தச் சப்பாத்தித் தோலையும் நீங்களே பதனிட்டுச் சாப்பிட்டுவிட்டு அசெம்பிளிக்குப் போய்ச் சேருங்கள்! நான், 307—மூலம் இட்லி வாங்கி வரச் சொல்லி சாப்பிடப் போகிறேன்!

அமை: அட, உன் தலையிலே 'கோதுமைச் சப்பாத்தி' விழ! இதற்குத்தானா இவ்வளவு நேரம் போக்கினாய்? சரி! தொலைந்து போ! நானாவது சுட்டுத் தின்னுட்டுப் போகிறேன்!

[பாவம்; அமைச்சர் அந்தச் சப்பாத்தி மாவை, அடித்துப் பிசைந்து, அவசர அவசரமாகச் சுட்டு, வெந்தது பாதி, வேகாதது பாதியாக எடுத்து, அப்படியே போட்டு விழுங்கிவிட்டு அசெம்பிளிக்கு ஓடுகிறார். வழியிலே விக்கல் எடுக்கிறது. கோட்டை வாயிலிலே இருந்த குழாய் நீரைக் குடித்துவிட்டு அசெம்பிளியின் ஆசனத்திலே அமருகிறார். ஆனால் விக்கல் அப்பொழுதும் நிற்கவில்லை.]

மனைவி: எல்லாம் என் தலைவிதி! உங்ககிட்டே இப்படியெல்லாம் பேச்சு வாங்க வேண்டியிருக்கு! மந்திரி மனைவியாம்! ஊரே பெருமையா பேசிக்கொள்கிறது! உள்ளே நுழைந்து பார்த்தால்லவா மந்திரி மனைவியாயிருப்பது எவ்வளவு கஷ்டமென்பது தெரியும்? எல்லாம் என் தலை எழுத்து! தலை விதி!

அமை: "தலை விதி! தலை விதி!" என்று இனிமேல் கூறினால் அந்தத் தி. மு. க. வினரை விட்டு உன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரச் சொல்லுவேன்! ஆமாம்!

மனைவி: நல்லா கொண்டுவாங்க! நான் இப்பொழுதே என் அப்பா வீட்டுக்குப்போறேன்!

காட்சி: 2
மருத்துவ மனை

மனைவி: ஐயோ! அப்பொழுதே சொன்னேனே, அந்தப் பாழும் சப்பாத்தி உடம்புக்கு ஒத்துக்காது என்று! கேட்டாரா அவர்? அங்கே நான் பிசைந்து வைத்திருந்த மாவு முழுவதையும் சுட்டுத் தின்று விட்டார்!........டாக்டர், எப்படி இருக்கிறது?

டாக்டர்: பயமில்லை! அஜீரணக் கோளாறு! 105 டிகிரி ஜுரம்! இப்பொழுது ஒரு ஊசி போடுகிறேன்! மருந்து எழுதிக் கொடுக்கிறேன்! கவலை வேண்டாம்! விழித்துக் கொண்டு அவரே கேட்டாலும், எதையும் சாப்பிட மட்டும் கொடுத்து விடாதீர்கள்! முழுப் பட்டினி போட வேண்டும்!...... நான் மாலை வந்து பார்க்கிறேன்!

மனைவி: டாக்டர் சார்! எப்படியாவது அவரைக் காப்பாற்றி விடுங்கள்! மந்திரிசபை ஒரு மந்திரியை இழந்துவிடக் கூடாது, டாக்டர்!

[டாக்டர் போகிறார்.]

காட்சி: 3
அமைச்சர் வீடு

மனைவி: ஏனும்...? இன்னும் என்ன உங்கள் உடம்புக்குக் கேடு? இட்லி தயாராயிருக்கு! எழுந்திருந்து இந்த வீட்டைச் சுற்றிலும் பத்து தடவை ஓடிவிட்டு வாங்க! அப்பொழுதுதான் உங்கள் சதை குறையும்! தொந்தி கரையும்!

அமை: ஐயோ! என் மானத்தை வானத்தில் பறக்கவிட்டு விடுவாள் போலிருக்கே!

மனைவி: அன்று நாலணாவுக்கு இட்லி வாங்கிச் சாப்பிட்டிருந்தால், இவ்வளவு தொல்லை ஏன்? நூறு ரூபாய் டாக்டருக்குக் கொட்டிக் கொடுக்க வேண்டியதில்லையல்லவா? இந்தச் சப்பாத்தியெல்லாம், அந்த வடக்கத்தி ஆசாமிகளுக்குத்தான் பொருந்தும்! "ரோடீ காயா?" என்பதற்குப் பதிலாக, "சாப்பாடு சாப்பிட்டாயா?" என்று கூட கேட்க மாட்டார்களே!... அவர்கள்கூட இப்பொழுது அரிசி தின்ன ஆரம்பித்து விட்டார்கள்! அதன் பலன்? நமக்கு அரிசிப் பஞ்சம் வந்துவிட்டது!

அமை: அம்மா! நீ வேறு "வடக்கு—தெற்கு" எனப் பேச ஆரம்பித்து விட்டாயா? போதும்! மறுபடியும் எனக்கு மயக்கம் வந்து விடப் போகிறது!......நீ இட்லியை வை! வசை புராணத்தை இத்துடன் நிறுத்திக் கொள்! பேச ஆரம்பித்தால் பிசாசுதான்!

மனைவி: என்ன சொன்னீர்கள்? நானா பிசாசு? நீங்க பிசாசு! உங்க மந்திரி சபை பிசாசு! உங்க வமிசமே பிசாசு!

[ஓர் இட்லி அமைச்சர்மீது விழுகிறது; மயக்கமுற்று கீழே விழுகிறார்.. கூக்குரல் கேட்டு போலீஸ்காரர்கள் உள்ளே ஓடி வருகிறார்கள். ....ஆனால் அவர்களால் அமைச்சரது வாழ்க்கையில் அமைதியை ஏற்படுத்த இயலுமா என்ன? பாவம், அமைச்சர்!]

—"இன்பபுரியான்"

சட்டசபை வேடிக்கை!

சட்டசபையில் ஒரு கம்யூனிஸ்டு தோழர் கேட்ட கேள்வியை மந்திரி சுப்பிரமணியம் திரும்பச் சொல்லச் சொல்லி, அந்தத் தோழர் திரும்ப அதே கேள்வியை விஸ்தாரமாகச் சொல்லியும்....

"எழுதிக் கொடுங்கள்-அப்போதாவது கேள்வியின் அர்த்தம் புரிந்தால் பதில் சொல்லுகிறேன்" என்று கூறினார். சபையில் ஒரே சிரிப்பு எழுந்தது!



வெள்ளி 29—11—57 சென்னை

இதுவல்ல வழி!

இந்திய உபகண்டத்திலே சாலை விபத்துக்கள் குறைவாக நேரி டும் மாநிலம் தமிழ்நாடு என்று கூறுவார்கள்.

அந்தத் தமிழ் நாட்டிலே இன்று நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்துவரும் குற்றங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று கள்ளச் சாராயம் காய்ச்சுதல்; அடுத்தது கள்ளக் குடியேற்றம் நடத் துதல்!

இவற்றுள் கள்ளக் குடியேற்றம் சென்ற ஜூலை, ஆகஸ்ட், செப் டம்பர் மாதங்களில் திடீரென்று அதிகரித்து விட்டதாம்.

விஷக் காய்ச்சலைப் போல் வளர்ந்துவரும் இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்காக கடந்த வாரம் திருநெல்வேலி; தஞ்சை; ராமநாதபுரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்த போலீஸ் உயர்தர அதிகாரிகளும்; சென்னை மாநிலத்திலுள்ள இந்திய அரசினர் குடியேற்ற இலாக்கா அதிகாரிகளும் கூடிப் பேசி முடிவு கண்டிருக்கின்றனர். இதற்காக விசேஷ அதிகாரி ஒரு வரையும் இந்திய அரசினர் நியமித்திருக்கின்றனர்.

இனிமேற்கொண்டு இந்த அதிகாரி கள்ளக் குடியேற்றத்திற் கெதிராக தென் மாவட்டத்துக் கிராமப் பகுதிகளிலே தீவிரப் பிரச் சாரம் செய்வாராம். சந்தேகப்படுகிறவர்கள்; ஏஜண்டுகள்; குடியேற உத்தேசித்திருக்கிறவர்கள் — ஆகியவர்களைக் கண்காணிப்பாராம். அதோடு விசேஷப் போலீசாரோடு சேர்ந்து சோதனைகளும் நடத்து வர்ராம்!

—இப்படியெல்லாம் முடிவு செய்திருக்கிறது அந்த உயர்தரப் போலீஸ் அதிகாரிகளின் மாநாடு!

நோயாளியைக் கைப்பிடித்துப் பார்த்து; நாடித் துடிப்பை அறிந்து; வியாதியின் மூலகாரணத்தைக் கண்டு; அதைக் களைந்தெறி யும் வைத்தியரைத்தான் சிறந்தவர்; உயர்ந்தவர் என்று போற்றுவார் கள். அதை விடுத்து; நோயின் மேற்குணங்கள் நீங்குமளவுக்குத் தற் காலிக மருந்து வழங்குபவரைத் தேர்ந்த வைத்தியர் என்று அறிவிலியும் ஒப்புக்கொள்ள மாட்டான்.

ஆனால் கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காகத் தமிழ் நாட் டின் தென் மாவட்டங்களில் தனது நடவடிக்கையைத் தீவிரமாக்கிக் கொண்டுவரும் இந்திய அரசினரின் போக்கைக் கவனிக்கும்போது; அவற்றை நோயின் மூலகாரணத்தைக் கண்டுபிடிக்க முடியாத போலி வைத்தியனின் பணம் பறிக்கும் சூழ்ச்சியோடுதான் ஒப்பிட வேண்டியிருக்கிறது.

பிறந்த பொன்னாட்டைத் துறந்து; தவழ்ந்து விளையாடிய தாய கத்தை மறந்து; அவர்கள் ஏன் அன்னிய பூமியை நோக்கிக் குடும்பம் குடும்பமாகக் குடியேற முயற்சிக்கிறார்கள்?

அவர்கள் குடியேற நினைக்கும் இலங்கையிலே மட்டுமென்ன; அங்குள்ளவர்கள் இரு கையேந்தி; பன்னீர் தெளித்து; பூரண கும்பத்துடன் வரவேற்பா நடத்துகிறார்கள்?

இல்லை; காறி உமிழ்கிறார்கள்; சட்டமென்னும் செருப்பு மாட் டிக் கொண்டு காலால் உதைக்கிறார்கள்; ‘கள்ளத் தோணி’ என்று மானம் பறிபோகும் விதத்திலே கேலிக் கணை தொடுக்கிறார்கள்!

அப்படி இருந்தும்; இந்திய அரசினரின் போலீஸ் இலாக்காவின் கண்ணிலே மண் தூவிவிட்டு அவர்கள் ஈழநாடு நோக்கித் திருட்டுத் தோணியிலே பயணம் புறப்படுவானேன்?

—இவற்றிற் கெல்லாம் ஒரே காரணம், பிறந்த நாட்டிலே பிழைக்கும் வழி இல்லாமைதான்!

பானை பொங்க வேண்டிய அடுப்பிலே பூனை தூங்குகிறது! வறுமை கூரிய வாளெனக் குடலைத் துண்டிக்கிறது!

உடலிலே வலு இருக்கிறது; ஆனால் வேலை கிடையாது! தற்கொலை செய்துகொள்வது கோழைத்தனம் என்று கருதி பயப்படு பவர்கள் வேறு என்னதான் செய்வார்கள்?

ஈழம் சென்றாலும்; அரை வயிறாவது நிரம்பாதா என்ற பேராசை அவர்களைக் காந்தம்போல் சுண்டி இழுக்கிறது; குழந்தை குட்டிகளுடன் கிளம்பி விடுகிறார்கள்!

—தென்னகத்திலே இவ்வித வறுமை கோரத் தாண்டவமாடு வதற்கு மூலகாரணம் இந்திய உபகண்டத்தின் இந்தப் பிராந்தியத்தில் தொழில் வளம் பெருகாமைதான்!

தென்னகத்தின் தொழில் அபிவிருத்திக்குத் தகுந்த திட்டம் தீட்டவில்லை, டில்லி மத்திய அரசு!

அப்படித் தீட்டப்பட்ட திட்டங்களையும் விரைவாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற எண்ணமும் அவர்களிடம் தோன்றவில்லை! ஏன் அப்படி—என்று அதட்டிக் கேட்கவும் இங்குள்ள அமைச்சர் களுக்குத் துணிச்சல் சிறிதுமில்லை!

அதுமட்டுமல்ல; ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம் பெற்றிருக்கிற சில உருப்படியான திட்டங்கள்கூட கைவிடப்படும் பட்டியலிலே தான் சேர்க்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாக, சேலம் மாவட்டத்திலே வெட்டி எடுக்கப்படும் ‘பாக்சைட்’டைக் கொண்டு ஓர் அலுமினியத் தொழிற்சாலையைத் துவங்குவதாக ஒரு யோசனை உலவி வந்தது.

ஆனால் ‘மெயில்’ பத்திரிகையின் டில்லி நிருபரோ இப்போது ஒரு திடுக்கிடும் செய்தியைத் தெரிவிக்கிறார்.

நிதி வசதிக் குறைவு என்னும் காரணத்தைக் காட்டி உட னடியாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படமாட்டாது — என்று டில்லி வட்டாரத்திலே அபிப்பிராயம் உலவுகிறதாம்!

—இது நல்ல தொழிற்சாலை அமைப்புத் திட்டங்கள் கைவிடப் படுவதற்கோரு உதாரணம்!

ஆனால் புதிய தொழிற்சாலைகளாவது தென்புலத்தில் துவங்கு வதற்கு ஆவன செய்கிறார்களா?

—அதுவுமில்லை. சாதாரண பிளேடு உற்பத்தித் தொழிற்சாலை யைக்கூட விந்தியம் தாண்டி இப்பால் நிறுவுவதற்கு வசதி செய்து கொடுக்க மறுக்கின்றது, மத்திய அரசாங்கம்!

இப்போது இந்திய உபகண்டம் அனைத்திலும் ஐந்து பிளேடு உற் பத்தித் தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

—வெளிநாட்டிலிருந்து பிளேடு இறக்குமதி கட்டுப்பாடு செய்யப் பட்டிருக்கும் இந்த நேரத்தில் அந்தத் தொழில் வளர்வதற்கான சாத் தியக் கூறுகள் விளக்காமலேயே யாருக்கும் புரியும்.

அந்த ஐந்து தொழிற்சாலைகளில் இரண்டு கல்கத்தாவிலும்; இரண்டு பம்பாயிலும்; ஒன்று உஜ்ஜயினியிலும் இருக்கின்றன. இவை ஆண்டொன்றுக்கு **8,000** இலட்சம் பிளேடுகளை உற்பத்தி செய் கின்றன.

மொத்தம் ஐந்து தொழிற்சாலைகளும் வடநாட்டில் இருக்கும் போது புதிதாகத் துவங்கும் தொழிற்சாலைகளை தென்னகத்தில் துவங்குவதுதானே ஓர வஞ்சகமற்ற, நியாயமான முறை?

ஆனால் நடப்பதோ அதற்கு எதிரிடையாக இருக்கிறது!

இனிப் புதிதாகத் துவங்கப்போகும் தொழிற்சாலைகளில் ஒன்றை உத்தரப் பிரதேசத்திலும்; இன்னொன்றை டில்லியிலும் நிறுவப்போகிறார்களாம்!

—ஆக; தென்னகத்திற்குப் புதிய திட்டங்களும் கிடையாது; அதைப் போலவே இங்கு இருக்கிற பழைய திட்டங்களும் நிறை வேற்றப்படுவதில்லை!

நிலைமை இவ்வாறு இருக்குமானால் இங்கே கள்ளக் குடியேற் றம் எவ்வாறு அதிகமாகாமலிருக்க முடியும்?

அதை விட்டு; நோயின் மூலகாரணம் வேலையில்லாத் திண் டாட்டமும் அதன் கூடப் பிறந்த தொழில் வளமின்மையும் என்பதை மறந்துவிட்டு; விசேஷ அதிகாரியையும்; அவருக்கு விசேஷ அதிகாரங் களையும் தருவதால் என்ன பயன் பெறமுடியும்?

கள்ளக் குடியேற்றம் ஒழிக்கப்பட வேண்டுமானால், அதற்கு முதல் தேவை மத்திய அரசாங்கம் தென்னகத்தின்பால் கொண்டி ருக்கும் கள்ள நெஞ்சத்தை ஒழிப்பதுதான்—என்பதை இனியாவது அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் ‘கள்ளக் குடியேற்றம்’ பெருகிக் கொண்டேதான் இருக்குமென்பதில் ஐயப் பாட்டிற்கே இடமில்லை!

கோட்டைக்குள்ளே குத்து வெட்டு!

காங்கிரஸ் ஆட்சியிலே காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் கட்சிக்காக 'சத்யாக்கிரகம்' நடத்துவதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

—அப்படி ஒரு வேடிக்கையான சம்பவம் கல்கத்தாவிலே நடைபெற்றிருக்கிறது.

அங்கே சமீபத்தில் மண்டல காங்கிரஸ் கமிட்டிக்கான தேர்தல் நடைபெற்றது.

அந்தத் தேர்தல் போதிய முன்னறிவிப்பின்றி நடைபெறுவதாகவும்; அதனால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் கட்சியிலேயே ஒரு பிரிவினர் விரும்பினார்கள்!

ஜனநாயகத்துக்கு மதிப்பு வைக்கும் இயக்கமா காங்கிரஸ் கட்சி? அதனால் அவர்களது கோரிக்கை மறுக்கப்பட்டது.

அமைதி வழிப் போராட்டத்தைத் துவக்கி வைத்தவர்களே காங்கிரஸ்காரர்களாயிற்றே! அவர்களா சும்மாயிருப்பார்கள்?

கொதித்துக் கிளம்பினார்கள்! காந்தியாரின் போராட்டங்களை ஒருமுறை நினைவு படுத்திக் கொண்டு; கட்சியின் சர்வாதிகார முறையைக் கண்டித்து; நீதி பெறுவதற்காகச் சத்யாக்கிரகமே துவங்கிவிட்டார்கள்!

—இவையனைத்தும் திரை மறைவில் நடந்ததென்றுவது நினைக்கிறீர்களா?

அதுதான் இல்லை! பட்டப் பகலில் கையிலே காங்கிரஸ் கொடியுடனும்; வாயிலே 'காங்கிரஸ் ஜிந்தாபாத்' கோஷமுடனும் அவர்கள் கல்கத்தா வீதிகளிலே பவனி புறப்பட்டார்கள்!

காங்கிரஸ் கட்சியிலே எந்த மாநிலத்திலேதான் உட்பிரிவு இல்லாமல் இருக்கிறது?

உடனே இந்த கோஷ்டிக்கு எதிராக இன்னொரு கோஷ்டியும் ஊர்வலம் புறப்பட்டது.

அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களின் கையிலும் காங்கிரஸ் கொடிதான்! அவர்கள் முழக்கமிட்டதும் 'காங்கிரஸ் ஜிந்தாபாத்' என்ற கோஷத்தைத்தான்!

ஓர் இடத்திலே அந்த இரு கோஷ்டியினரும் சந்தித்தார்கள்.

விளைவு?

மோதல்!

அந்த மோதலிலே ஒரு கோஷ்டியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள், இன்னொரு கோஷ்டியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் மீது கற்களை வீசினர்! செருப்புகளை வீசினர்! கொடிக் கம்புகளை வீசினர்! (அந்தக் கொடிக் கம்புகளிலே காங்கிரஸ் கொடியும் கட்டப்பட்டிருந்ததாம்!)

—இப்படி கல்கத்தா வீதியிலே ஒரு குட்டி கொரில்லா யுத்தமே நடைபெற்றிருக்கிறது!

முடிவு?

மூன்று காங்கிரஸ்காரர்களுக்குக் காயம் ஏற்பட்டது.

அதில் ஒரு நபருக்குப் பலத்த காயம் ஏற்பட்டு; அவர் மருத்துவ மனைக்கும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

அதன் விளைவாக இருபத்தி மூன்று காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்!

—அவர்கள்மீது போலீசார் சாட்டியிருக்கிற குற்றச்சாட்டு என்ன தெரியுமா?

நடுத் தெருவிலே சண்டையிட்டுக் கொண்டு; போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவித்தார்கள்; அமைதிக்கு வேட்டு வைத்தார்கள்—என்பதல்ல!

மண்டலக் காங்கிரஸ் தேர்தல் அதிகாரியைத் தன் கடமை செய்வதினின்றும் தடுத்தார்கள்—என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள்!

—இந்தக் குட்டிக் கலகத்தில் தலையிட்ட பெரிய புள்ளிகள் யார் யார் தெரியுமா?

மூன்று அமைச்சர்கள்! இவர்களில் ஒருவர் மத்திய அரசாங்கத்து அமைச்சராம்!

அவர்கள் சத்யாக்கிரகிகளிடம் 'உங்கள் குறைகள் கவனிக்கப்படும்; அவை நியாயமாக இருந்தால் வேறு புதிய தேர்தலுக்கும் ஏற்பாடு செய்கிறோம்'—என்றுகூட உறுதியளித்தார்களாம்!

ஆனால் அமைச்சர்களின் இந்தத் தலையீடு வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை!

கைது செய்யப்பட்ட சத்யாக்கிரகிகள் போலீஸ் லாரிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட போது கூட "காங்கிரஸ் ஜிந்தாபாத்"—என்று முழங்கிக் கொண்டேதான் சென்றார்களாம்!

முதலில் சத்யாக்கிரகம் செய்தவர்கள் 23 பேர்!

அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட பிறகு, மீண்டும் ஒரு பிரிவினர் அவர்கள் இடத்தைப் பிடித்துக் கொண்டு; சத்யாக்கிரகத்தைத் தொடர்ந்திருக்கின்றனர்!

அப்படி என்ன; ஒரு சாதாரண மண்டலக் காங்கிரஸ் கமிட்டித் தேர்தலுக்காக இவ்வளவு பெரிய ஆர்பாட்டமா?—என்று கேட்கத் தோன்றுகிறதா?

அதற்கும் காரணம் இருக்கிறது. மண்டலக் காங்கிரஸ் கமிட்டியில் ஒரு பிரிவினர் ஆதிக்கம் செலுத்தினால்தான் அதே பிரிவினர் மாநிலக் காங்கிரஸ் கமிட்டியிலும் ஆதிக்கம் செலுத்த முடியும்!

—அப்போதுதான் அந்தப் பிரிவு மந்திரி சபையை ஆட்டிப் படைக்க முடியும்! அப்போதுதான் 'பர்மிட்' வேட்டை தங்கு தடையின்றி நடைபெறமுடியும்!

அதற்காகத்தான் காங்கிரஸ்காரர்கள் மானத்தைவிட்டு 'காங்கிரஸ் ஜிந்தாபாத்' என்கிற கோஷத்துடன் சத்யாக்கிரகம் நடத்தியிருக்கின்றனர்!

பாவம்; அவர்கள் கள்ளமார்க்கெட்காரர்களை எதிர்த்து சத்யாக்கிரகம் நடத்தவில்லை!

இந்தப் பஞ்ச காலத்திலும் உணவு தானியத்தைப் பதுக்கி வைக்கும் பெருச்சாளிகளை எதிர்த்து சத்யாக்கிரகம் நடத்தவில்லை!

வரி கொடுக்காமல் ஏமாற்றி; ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிக்கு முட்டுக்கட்டைபோடும் மூர்க்கர்களை எதிர்த்துச் சத்யாக்கிரகம் நடத்தவில்லை!

காங்கிரஸ்காரர்களை எதிர்த்தே காங்கிரஸ்காரர்கள் சத்யாக்கிரகம் நடத்தியிருக்கிறார்கள்!

பாவம்; காங்கிரசின் இந்த வளர்ச்சியை எல்லாம் இருந்து பார்க்க காந்தியாருக்குக் கொடுத்து வைக்கவில்லையே!

★ ★ ★

விழலுக்கு இறைத்த நீர்!

2,50,000 ரூபாய்!

—வீணாக்கப்பட்டிருக்கிறது, அரசாங்கத்தால்!

வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்த வேண்டுமென்கிறார்கள்!

'சிக்கனம், சிக்கனம்' என்று மூலை முடுக்கில் நின்று கொண்டு முழக்கமிடுகிறார்கள்!

இருந்தாலும் இரண்டரை லட்சம் ரூபாயை விரயமாக்கியிருக்கிறார்கள்!

பம்பாய் மாநிலத்தில் பிரதாப்காட் என்னுமிடத்தில் வீர சிவாஜியின் உருவச் சிலையை பண்டித நேரு திறந்து வைக்கப் போகிறார்!

சிலை நிர்மாணிக்கப்படும் அந்த இடத்திற்குப் போவதற்குச் 'சரியான' சாலைகள் இல்லையாம்!

இந்தியாவின் பிரதமர் போகிற சாலையென்றால் சாதாரணமாக இருக்கலாமா?

அதனால் அவசர அவசரமாகச் சாலையொன்றை நிர்மாணித்திருக்கிறார்கள்!

அதற்காகவே பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து சுமார் இரண்டரை லட்சம் ரூபாய்களைத் தாராளமாக அள்ளிச் செலவழித்திருக்கிறார்கள்!

சரி; இவ்வளவு ரூபாய்களைச் செலவழித்திருக்கிறார்களே; அந்தச் சாலை பொதுமக்களது போக்குவரத்திற்கோ; அல்லது சரக்குப் பரிவர்த்தனைக்கோ மிகவும் அவசியமானதா?

அப்படியும் இல்லை!

பண்டித நேரு ஒருமுறை சென்று சிவாஜியின் சிலையைத் திறந்து வைத்து விட்டுத் திரும்பி விட்டால்; அந்தச் சாலை அவ்வளவு உபயோகத்திலிருக்காது!

மேலும், பம்பாய் மாநிலத்தில் அதைவிட அவசரமாகவும்; அவசியமாகவும் நிர்மாணிக்கப்பட வேண்டிய சாலைகளும்; செப்பனிடப்பட வேண்டிய சாலைகளும் ஏராளம் இருக்கின்றனவாம்!

இருந்தும் பண்டித நேரு பிரயாணம் செய்ய வேண்டும்; அதுவும் ஒருமுறை சென்று திரும்ப வேண்டும் என்பதற்காக இரண்டரை லட்சம் ரூபாய்களைப் பாழடித்திருக்கிறார்கள்!

ஏழை இந்தியாவில்; ஏழை இந்தியாவின் பிரதமர் ஒரே ஒரு முறை பிரயாணம் செய்வதற்காக; ஏழை இந்தியர்கள் இரண்டரை லட்சம் ரூபாய்களைக் கொட்டி அழவேண்டிய பரிதாபகரமான நிலைமை உருவாகியிருக்கிறது!

வெளிநாட்டிலிருந்து மருந்து இறக்குமதிக்குக் கட்டுப்பாடு!

வெளிநாட்டிலிருந்து 'பிளேடு' இறக்குமதிக்குத் தடை!

ஆனால் இதுபோல் வரிப் பணம் வீணாவதற்கு மட்டும் எந்தவிதக் கட்டுப்பாட்டையும் காணோம்!

வாளியிலுள்ள ஓட்டைகளை அடைக்காமல் தண்ணீர் சேதமாகிறது—என்று அலறுவதால் என்ன பயன்?

ஆதிக்கப் பித்தர்கள் 'அங்கே'!

"எல்லா அதிகாரத்தையும் மத்திய அரசாங்கம் குவித்துக் கொள்வதில் தீவிரம் காட்டி வருகிறது.

"மாநில அரசாங்கத்திற்கு சிறு சிறு கவளங்களைப் பிச்சை அளிப்பதுபோல அளித்து, ஆசை காட்டி விட்டு, மத்திய அரசாங்கம், தன்னிடத்தில் அதிகாரங்களைக் குவித்துக் கொள்ளும் மிகக் கேவலமான முறை வளர்ந்து வருகிறது!

"இந்திய அரசியல் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மாநிலங்களுக்கு நியாயமாக வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்தி, தங்கள் மறைமுக மிரட்டல்களையும் புரிந்து வருகிறது!

"நம்முடைய சுதந்திர அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது என்பது, அந்நியர் அரசாங்கத்தை எதிர்த்து முன்பு நடத்தப்பட்ட போராட்டம் போன்று அவ்வளவு எளிய காரியமல்ல. போராடி மக்களின் குடி உரிமைகளைக் காப்பாற்ற வேண்டியது மிக அவசியம்.

—டாக்டர் ஏ. இராமசாமி

சோமநாதபுரத்துச் சிலை

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.

சென்ற இதழில்...

- புலியின் குகையிலே சிக்கி விட்ட புள்ளி மானின் நிலையிலே—ஆலயத்து ரகசிய அறையில் சிக்கிவிட்ட புவனாவை திலோத்தமாவின் கண்காணிப்பில் விட்டு விட்டுச் செல்கிறான், துரோகி தலைமைப் புரோகிதன்! புவனாவின் புண்ணான வாழ்வுக் கதை கேட்டு திலோத்தமாவின் பெண்மை இரங்குகிறது. அவளைத் தப்புவிக்கவும் துணிகிறது. ஆனால் புரோகிதன் கழுகுக் கண்களிலிருந்து புவனா தப்பி விட முடியவில்லை...
- சோமநாத புரத்துக்குள் படைகளுடன் நுழைந்து விட்ட கஜினிக்கு புவனா கணவனோடு சிதையில் எரிக்கப்பட்டாள் என்ற செய்தி கிட்டுகிறது. அவளது குழந்தையை தன் அந்தப்புரத்திற்கு அனுப்புகிறான் கஜினி...
- ஆலயத்துக்கு முன்னே படுத்து வழிமறித்த ஆயிரக் கணக்கான புரோகிதர்களையும் கடந்து சோமேசரைத் தூளாக்கும் பணியிலே ஈடுபடுகின்றனர், முகம்மதிய வீரர்கள்!...

13

புவனாவைத் தூக்கியபடியே மிகமிக வேகமாகப் படிக் கட்டுகளில் ஏறிச் சென்று கொண்டிருந்தான் தலைமைப் புரோகிதன். பசியோடிருக்கும் புலி இரையைத் தூக்கிச் செல்வது போல், ஆவேசமாகச் சென்று கொண்டிருந்தான். புவனாவுக்கும் அவனுக்கும் இடையே இனி எதுவும் குறுக்கிட முடியாது; காலம் மட்டுமே குறுக்கிட்டு அவன் இச்சைக்கு இடையூறு செய்ய முடியும். காலம் குறுக்கிடுமுன் காரியசித்தி பெற்று விடுவது என்ற முடிவோடு இருந்தான் புரோகிதன். ஆம்; இஸ்லாமியர்கள் நகருக்குள் புகுந்து விட்டார்கள். சிறிது நேரத்தில், எவையெவை புனிதமென்று கருதப்பட்டனவோ; அவையெல்லாம் புழுதி மேடாகி விடும். அதற்குள்...அனுபவிப்பது மிச்சம்...பிறகு...? புரோகிதன் லாப நஷ்டக் கணக்குப் பார்த்தபடியே சென்று கொண்டிருந்தான்! ஆனால், புவனாவோ........? அவள் பாம்பின் வாயில் அகப்பட்டு விட்ட தேரை! புலியின் குகைக்கே வந்து விட்ட வெள்ளாடு!

ஒரு குறுகலான பாதையின் வழியாகப் புரோகிதன் ஏறிச் சென்றான். அவன் ஏறிச் செல்லும் பாதையின் சுவர்களில் 'கலீர் கலீர்' என்ற ஓசை கேட்டது. என்ன நடக்கிறதோ என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவனாய், அச்சத்தால் நடுங்கியபடியே முன்னிலும் வேகமாக ஏறினான். படிகளின் முடிவில் ஓர் அறை! உலகத்தின் செல்வமெல்லாம் அங்கு அடைக்கலம் அடைந்து விட்டதோ என்று எண்ணும்படியாக விலையுயர்ந்த நவரத்தின மணிகள் கொட்டிக் கிடந்தன. எங்கு பார்த்தாலும் மணிகள் பதித்த தங்கப் பாத்திரங்கள் நிரம்பியிருந்தன. ஒரு ஓரத்தில் யானைத் தந்தத்தினால் ஆன கட்டில்; அன்னத்தின் தூவியாலான படுக்கை; அதன்மேல் அகில் எப்பொழுதும், புகைந்து கொண்டிருந்தது. புவனாவைக் கட்டிலின்மீது கிடத்தினான் புரோகிதன். கசங்கிய மலர் மாலையாக அவள் கட்டிலில் துவண்டு கிடந்தாள்.

"புவனா, நம் இருவருக்குமே இது வாழ்க்கையின் கடைசி நாளாக இருக்கக்கூடும்; ஆலயத்துக்குள்ளேயே நாஸ்திகர்களின் மிலேச்ச கோஷம் கேட்க ஆரம்பித்து விட்டது...மரணத்தைத் தழுவுமுன் என் கடைசி இச்சையை நான் மனமார அனுபவித்ததாக இருக்கட்டும். வாழ்க்கையில் நீ மட்டும் என்ன சுகத்தைக் கண்டுவிடப் போகிறாய்? மிலேச்சப் போர் வீரர்களின் மிருக இச்சைக்குப் பலியாவதைவிட உனக்குத்தான் வேறு என்ன வழி இருக்கின்றது? அந்த நிரீஸ்வரவாதிகளைவிட நான் எப்படித் தாழ்ந்தவன்? எண்ணிப் பார், புவனா! வாழ்க்கையில் உனக்கும் எனக்கும் எஞ்சி யிருக்கும் ஒரே இன்ப நாள்...புவனா, புவனா!"

இரையின்மீது சீறிப் பாய்ந்தது அந்த நய வஞ்சக நாகம்! திடீரென்று பலமான இடிக்கும் ஓசை! சுவர்கள் நொறுங்கின. படிகளில் திடு திடு வென்று யாரோ ஓடி வரும் ஓசை கேட்டது. வியர்க்க விறு விறுக்க புவனாவைத் தன் பிடியிலிருந்து விடுவித்து, திரும்பிப் பார்த்தான் தலைமைப் புரோகிதன்!

மகத்தானதொரு கோவிலைக் கட்டி, அதில் மாபெரும் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வைத்து, அந்த லிங்கத்தின் ஆற்றல் பற்றிக் கதைகளும் கட்டிவிட்டு, அந்த லிங்கத்துக்குள்ளேயே தனியறையையும் அமைத்துக் கொண்டு, அதில் அபலைப் பெண்ணொருத்தியின் கற்பைச் சூறையாட முயலும் ஆணவம் பிடித்த தலைமைப் புரோகிதனைப் பார்த்து, வியப்பும் வேதனையும் கோபமும் ஆவேசமும் கொப்பளிக்க கஜினி முகம்மது நின்று கொண்டிருந்தான்.

திக்கற்ற நிலையில், ஆண்டவனாலும் கை விடப்பட்டு, கற்பு சூறையாடப்படவிருந்த வேளையில், தெய்வாதீனமாக வந்து சேர்ந்த தீனதயாளன் யார் என்று புவனா புனல் வழியும் கண்களுடன் நிமிர்ந்து பார்த்தாள். உண்மைதானா? கனவா; அன்றி பிரமையா? ஓநாயின் வாயிலிருந்து தனது மழலைச் செல்வத்தை மீட்ட அதே முகம்மதிய வீரன், இப்பொழுதும் அவள் கற்பு பறிபோகாமல் காப்பாற்ற வந்துவிட்ட நிலையை எண்ணி உள்ளம் நெக்குருகினாள். அவளையும் அறியாமல் "பிரபு...!" என்று கூறியபடியே கஜினியின் காலடியில் போய்த் திடீரென்று வீழ்ந்தாள்.

அன்பும் பரிவும் தோன்ற விழுந்தவளைத் தூக்கி நிறுத்தி முகத்தைப் பார்த்தான் கஜினி. சோமநாதபுரத்து வீழ்ச்சியை விட பெரியதொரு வெற்றியை எட்டிப் பிடித்துவிட்ட எக்களிப்பு அவனுடைய முகத்தில் தாண்டவமாடியது. இரவும் பகலும் எவளுக்காக ஏங்கி ஏங்கித் தவித்தானோ, சற்று நேரத்திற்குமுன் எவள் எட்டாத கனியாக நின்று நெருப்பிலே எரிந்து நீறாகிவிட்டதை எண்ணி நெஞ்சுருகினானோ, அந்தப் பெண் — இந்துஸ்தானத்தின் எழில் மலர் — அவனுடைய அன்புக் காதலி — இப்பொழுது அவன் மார்பிலே, அவன் அபயத்தையே நம்பித் துவண்டு கிடந்தாள். அவள் முகத்தில் கிழப் புலியின் கீறலால் ஏற்பட்ட இரத்தக்கோடுகள் மறையாமல் இருந்தன. சற்று நேரம் தாமதித்து வந்திருந்தால், அந்த மாடப் புறா போகப் பூனையின் மிருகப் பசிக்கு இரையாகியிருக்குமே என எண்ணிய கஜினி, கோபாவேசத்தோடு புரோகிதனைப் பார்த்தான்.

"புரோகித நாயே! நீ பூஜிக்கும் லிங்கத்தின் இருதய பீடத்திலேயே காமக் கூடம் அமைத்துக் களியாட்டம் போட உங்கள் சாஸ்திரமும் வேதமும் இடமளிக்கிறதோ! காமச் சேற்றில் புரளும் எருமைகள்தான் இந்துஸ்தானத்தில் புரோகிதர்கள் போலும்...தளபதி, இந்தக் கிழப் புரோகிதனை இழுத்துப் போய் மண்டபத்தின் நடுவிலே உள்ள தூணில் எல்லோரும் காறி உமிழும்படியாகத் தூக்கிட்டுக் தொங்க விடுங்கள்! தெய்வீகத்தின் பேரால் இவன் நடத்திய திருவிளையாடல்களுக்கு இவனுக்குக் கிடைத்த தண்டனையைப் பார்த்து மற்றவர்களாவது நல்லறிவு பெறட்டும்!"

தலை கவிழ்ந்து நின்ற தலைமைப் புரோகிதன் பதில் ஏதும் பேசவில்லை; பேசி, சித்ரவதைகளுக்கு ஆளாவதைவிட பேசாமல் தவிர்க்க முடியாத தண்டனையை ஏற்றுக் கொள்வதுதான் விவேகம் என்ற முடிவோடு, காவலாளிகளைப் பின் தொடர்ந்து முடிவு, நோக்கி அமைதியாகச் சென்றான்.

புவனா, மயக்கத்திலிருந்து தெளிவடையவே இல்லை. கஜினி அவளைக் கட்டிலில் படுக்க வைத்து கரிய பட்டு போன்ற கூந்தலை அன்புடன் கோதினான்; மலர் போன்ற முகத்தை ஆசையுடன் வருடினான்; அவளுடைய மூடிய இமைகளில் கோர்த்து நின்ற நீரை உரிமையுடன் துடைத்து விட்டான். தீட்டிய ஓவியம்போல் மாசு மருவின்றிக் கிடக்கும் அந்த அழகுக் கனியை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே நின்றான். சிந்துச் சமவெளியின் பசுமை வளர்த்து விட்ட அந்தச் செல்வத்தின் அழகு அவனுக்குத் தெவிட்டவே இல்லை!

தூரத்தில் குவிந்து கிடந்த பொன்னும் மணியும் கட்டிலில் கண்ணயர்ந்து கிடக்கும் அந்தப் பொற் சித்திரத்துக்கு இணையாகாது என்று எண்ணியோ என்னவோ கஜினி அவற்றின் பக்கம் கண்களைத் திருப்பவேயில்லை. போர் வீரர்கள் மட்டும் பைகளில் அவற்றைப் பேராசையோடு வாறி நிரப்பிக் கொண்டிருந்தனர்.

மயக்கமுற்ற நிலையிலும் புவனாவின் முகத்தில் லேசாகப் புன்னகை அரும்பியது. அந்தப் புன்னகையின் காந்த சக்தியால் கவரப்பட்ட கஜினி, அப்படியே குனிந்து, சூடு தணியாத அந்த உதடுகளில் அன்பு முத்திரையிட்டான்.

"பொறு, புவனாவின் புனிதத்தைக் களங்கப்படுத்தாதே" என்று கர்ஜனை புரிந்தது, ஒரு குரல்! தன்னைப் பார்த்தும் ஆணையிடும் துணிவு பெற்ற குரல் எது என்று அறியும் ஆவ

[தொடர்ச்சி பக்கம்—8]



இன்று போய் நாளை வந்தால் அன்றும் அந்தத் தொல்லைதான்!

[15—11—57 அன்று, சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆசிரியர் மு. கருணாநிதி ஆற்றிய உரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.]

வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து நாம் திராவிட நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லும்போது நம் திராவிட நாடு வடநாட்டின் ஒரு பகுதியாக இதுவரை இருந்து வந்து, அதை நாம் பிரித்துக் கேட்கிறோம் என்பதாக அர்த்தமல்ல!

திராவிட நாடு என்றுமே ஒரு தனி நாடுதான்; தொன்று தொட்டு தனித் தியங்கியது; ஆங்கிலேயர் காலத்திலே வடநாட்டோடு அது இணைக்கப்பட்டது; துப்பாக்கி முனையிலே அது ஒட்டி வைக்கப்பட்டது. இரு பெரும் நாடுகளை இணைத்துத்தான் பிரிட்டிஷ்காரன் ஆண்டான்; இப்பொழுது நாம் நமது நாட்டை நமக்குக் கேட்கிறோம்.

நம் திராவிட நாடு வளமிக்க நாடு! வற்றாத ஆறுகளும், பூமிக்குள்ளே தங்கமும், கடலிலே முத்தும் கொண்ட நாடு! யவனத்துடனும், ரோமாபுரியுடனும் வாணிபம் செய்தவர்கள், நாம்! பண்டை வரலாறு நமக்குத் தரும் வீரம், அந்த வீரத்தோடு சேர்ந்த விவேகம், அது தரும இன்பத் திராவிடமாம் வெற்றி—நம் கண்முன்னே புலனாகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும் முயற்சி; செய்துவரும் காரியங்களெல்லாம் தலைவர்கள் இருக்கின்ற காலத்தில் மட்டும் பயனளிக்க வேண்டும் என்று தற்காலிகக் கணக்குப் போட்டுச் செய்யவில்லை; அரசியல் வாண வேடிக்கை நடத்தி விட்டு ஓய்ந்து விடுவதற்கல்ல; 'நமக்குப் பின்னாலும் மக்கள் இருப்பார்கள்—எதிர்காலத்திற்கும் நிரந்தரமான பலன் கிடைக்க வேண்டும்' என்பதற்காகவே தி. மு. கழகம் பணியாற்றி வருகிறது.

நாங்களெல்லாம் சட்ட மன்றத்திலே நுழைந்தவுடனே வெளி, யுலகில் எங்கள் பணி கொஞ்சமும் குறைந்துவிடவில்லை.

நமது என். வி. நடராசன் அவர்கள் வெற்றி பெறவில்லை. அதற்குப் பதில் காங்கிரசைச் சேர்ந்த ஒரு அம்மையாரை—இந்தப் பேட்டை வாசியாகிய நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறீர்கள். நீங்கள் போட்ட ஓட்டு தமிழ் நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்னும் பெயர் வேண்டாம் என்று கூறுபவருக்கு—கைத்தறி வேண்டாம் என்று சொல்லுபவருக்குப் பயன்பட்டுவிட்டது.

"தமிழ் நாடு" என்று பெயர் வைக்க வேண்டும் என்று நாங்கள் கூறி, 'கூடாது' என்று காங்கிரஸ்காரர்கள் கூறி, பிறகு ஓட்டெடுத்தபோது நீங்கள் எந்த அம்மையாரை நம்பி சட்ட சபைக்கு அனுப்பி வைத்தீர்களோ—அந்த அம்மையார், உங்கள் நம்பிக்கைக்கு மாறாக—தமிழ் நாடு பெயர் வைக்கக் கூடாது என்பதற்கு ஆதரவாக ஓட்டளித்தார்.

தோழர் நடராசன் வெற்றி பெறவில்லையே என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. நீங்கள் உங்களுக்கிருந்த நல்ல வாய்ப்பைப்பெற தவறி விட்டீர்கள் என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். நீங்கள் தோழர் நடராசனை அனுப்பி, தமிழ்நாடு பெயர் வைக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக அவர் கரம் உயர்ந்திருக்குமானால் நீங்கள் அளித்த ஓட்டுகளை நினைத்து பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

தமிழ் நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்ற பெயர் கிடைக்கவில்லை; மேலும் நம மொழியையும் அழிக்கிற விதத்திலே இன்று இந்தியைப் புகுத்தும் திட்டத்துக்குக் காங்கிரஸ் அமைச்சர்கள் ஆதரவு தருவதா, எதிர்ப்பதா?—என்று புரியாமல், மதில்மேல் பூனை போல இருக்கிறார்கள்!

கல்வித் திட்டத்தில், மாணவர்கள் மூன்று மொழிகளைப் படித்தே ஆக வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பள்ளியிலேயுள்ள இளம் சிட்டு-வருங் கால மன்னர்கள் — ஒரு அரும்பு—மூன்று மொழிகளைப் படித்துத் தீர வேண்டும்; இதற்கு என்ன அர்த்தம்? இந்தி புகுத்தப்படவில்லை என்று கூறுபவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். பால் சாப்பிடுகிறவனிடம் சென்று, 'கொஞ்சம் விஷமும், அக்னி திராவகமும் சேர்த்துச் சாப்பிடு' என்பது போலத்தான்—தமிழ் ஆங்கிலத்துடன் இந்தியையும் சேர்த்துப் படிக்கச் சொல்லும் திட்டம்!

இந்தியாவிலே இந்தியில்லாத வேறு பகுதிகளிலும் இந்திதான் ஆட்சிமொழி; உத்தியோகம் பார்க்கும் அரசாங்க ஊழியர்கள் இந்தி கற்றுத்தான் ஆகவேண்டும்; வாணிபத் தொடர்புக்கும் இந்திதான் இருக்கப் போகிறது — என்று சொல்லி, இந்தி படிக்கச் சொல்லுகிறார்கள். உள்ளத்தைக் காட்டியல்ல—வயிற்றைக் காட்டிச் சொல்லுகிறார்கள், இந்தி படிக்க வேண்டுமென்று! 'இந்தி இஷ்டப் பாடம்தான்; ஆனால் அதைப் படித்தால்தான் வேலை' என்று கூறினால், ஏழை மகன் என்ன செய்வான்? வயிற்றுக்குச் சோறு தேடுகிறவன் என்ன செய்வான்? இந்தியைப் படித்துதான் தீருவான்! கால் வயிற்றுப் பாட்டுக்கு தன் அருமந்த செல்வனை நம்பியிருக்கிறார்கள், பெற்றோர்கள்!

எப்படியும், இன்று இல்லையேல் நாளை வரப்போகும் தமிழகத்தில் — ஆர்த்தெழுகின்ற கொந்தளிப்பை கொஞ்ச காலத்துக்குத் தள்ளி வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வது போல—இன்னும் கொஞ்சம் பின்னால் இந்தியைக் கொண்டு வரலாம் என்று கூறும் வடநாட்டுக் கங்காணிகளும் இருக்கிறார்கள்.

சனநாயகக் காங்கிரஸ் கட்சி என்னும் காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியினரும், 'இந்தி அறவே வேண்டாம்' என்கிறவர்களல்ல! 'பெண்ணுக்குக் கல்யாணம் ஆகுமளவுக்கு இன்னும் வயதாகவில்லை' என்று சொல்வதைப் போல அவர்கள், 'இந்தி இன்னும் தகுதி பெறவில்லை' என்றுதான் சொல்லுகிறார்கள்.

இராமாயணத்திலே நிராயுதபாணியாகிவிட்ட இராவணனைப் பார்த்து இராமன், 'இன்று போய் நாளை வா' என்று கூறியதாகக் கம்பன் வர்ணிக்கிறானே, அதைப்போல இவர்களெல்லாம், 'இந்தியே, நீ இன்று போய் நாளை வா' என்றுதான் கூறுகிறார்கள்; நாமோ, 'இன்று போ; இனி என்றுமே வராதே' என்கிறோம்.

எங்கள் அறிவு, ஆற்றல், வீரம், மொழி, கலை, பண்பாடு அத்தனையும் வேறு; உனக்கும் எங்களுக்கும் உள்ள மாறுபாடுகளை—வேறுபாடுகளை எடுத்துக் கூறி, ஆதாரங்களை அள்ளி வீசிய பின்பு—'நீ எங்களுக்கு அன்னியன்; உன் காலடியில் இருக்க மாட்டோம்' என்று கூறிவிட்ட பிறகு, 'இந்தியை நீங்கள் படித்துத்தான் ஆக வேண்டும்' என்று நம்மைப் பார்த்துச் சொன்னால் என்ன பொருள்?

'எங்கள் நாடே வேறு; உன் நாட்டுக்கும் எங்கள் நாட்டுக்கும் சம்பந்தமில்லை' என்று சொன்ன பிறகு, பொது மொழி ஏன்?

அவர்கள் — வடநாட்டவர் ஏகாதிபத்திய வழி வந்தவர்கள்; அடிப்படையிலேயே நமக்கும் அவர்களுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன.

நம் நாட்டை ஆள, நமது தாய் மொழியாம் தமிழ் இருக்கிறது; பிறநாட்டுத் தொடர்புக்கு ஆங்கிலம் இருக்கிறது; எனவே, எங்களுக்கு இந்தி வேண்டாம் என்கிறோம்.

இந்தியை நாம் எதிர்ப்பதற்கும், ஆச்சாரியார் எதிர்ப்பதற்கும் வேறுபாடு உண்டு—'ஏக பாரதம்' என்பதை ஒத்துக் கொண்டு எதிர்க்கிறார் அவர்!

ஆச்சாரியார் என்றால் சாதாரணமானவரல்ல; சாணக்கியர் என்று புகழப்படுபவர்; அவருக்குத் தலையெல்லாம் மூளை—மூளையெல்லாம் சிந்தனை—சிந்தனையெல்லாம் வஞ்சனை! அப்படிப்பட்ட ஆச்சாரியாரையே எதிர்த்து வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறோம். அண்ணா அவர்கள் திருவண்ணாமலை மாநாட்டில் கூறியதுபோல, அம்மியே ஆடிக் காற்றில் பறந்தபோது, இந்த இலவம் பஞ்சுகள் எம்மாத்திரம்?

டிசம்பர் முதல் வாரம் கிடைக்கும்!

சத்தான கருத்துகள்—
வித்தகர் பேருரைகள் நிறைந்த
இலக்கியப் பேரிதழ்

முத்தாரம்

புலவர் குழந்தை
கே. ஏ. மதியழகன்
நாஞ்சில் கி. மனோகரன்
கவிஞர் வாணிதாசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்!

மற்றும்,

கை: சிறுகதை இலக்கிய மன்னன் மாப்பசான் தீட்டிய மர்மக் கதை—தமிழில்.

முத்தின் ஒளி: முத்துக்கு ஒளி பிறந்த விதத்தை விளக்கும் அறிவியல் கட்டுரை.

அனாதை ஆலிவர்: சார்லஸ் டிக்கன்சின் மகத்தான பெருங்கதை தமிழில் சுருக்கித் தரப்படுகிறது.

இத்துடன்

ஆசிரியர் மு. க. வின்

கவிதைநடைச் சிறுகதை வழக்கம்போல் உண்டு!

அதனால் இன்றே போ— திரும்பி வராமல் ஒழிந்தே போ!

மீண்டும் இப்பொழுது இந்தி புகுத்தப்பட்டால் அதை எதிர்க்க இலட்சோப இலட்சம் பேர் தயாராகியிருக்கிறார்கள். கரத்திலே கழகக் கொடி ஏந்தி அறப் போர்க் களத்திலே இறங்கத் தயாராயிருக்கிறார்கள்.

இன்று நாம், 'இந்தியை எதிர்த்திட எத்தனை பேர் தயாராயிருக்கிறார்கள்' என்ற கணக்கைத்தான் எடுக்கிறோம்; வெறும் பட்டியல் காட்ட அல்ல! பட்டியலைக் காட்டிவிட்டு, அர்த்த இராத்திரியிலே போராட்ட நிறுத்த அறிக்கை கொடுத்துவிட அல்ல! அத்தனைப் பேரும் உறுதியோடு நின்று இந்தியை எதிர்க்க வேண்டும். இன்று இல்லையேல் இன்னொரு நாள், இந்திப் படையெடுப்பு நம்மைத் தாக்கியே தீரும். எனவே, இன்றைக்கே நம்மை நாம், 'இந்தியை எதிர்க்கத் தயாரா?' என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

படை கிளம்ப வேண்டுமென்றால் பாசறை அமைத்து, கேடயமும் கட்கமும் ஏந்தி வீரர்கள் புறப்பட வேண்டும் என்று அல்ல! வீரக் காளையர்கள் தமிழகத்தில் என்றும் இருப்பர்! தெரு தோறும் பாசறையாக மாறும் என்பது தெரியும்! முதலில் உள்ளத்தைத் தயார் படுத்திக் கொண்டு எத்தனைத் தாளமுத்து — நடராசன்கள் இருக்கிறார்கள் என்ற அந்தக் கணக்குத்தான் தேவை!

நாம் இந்த எதிர்ப்புப் போராட்டத்தைச் சந்திக்காதவர்கள் அல்ல. அந்தப் போராட்டத்திலே நாம் சிந்திய முத்துக்களில் ஒன்றுதான் தாளமுத்து-நடராசன். அந்தப் போராட்டத்திலேதான் நம் அண்ணா ஒரு ஒளிமுத்தாகப் பிரகாசித்தார். 1,000 பேருக்குமேல் சிறைக் கோட்டம் புகுந்தார்கள். அண்ணாவுக்கு 6—மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை அப்பொழுதுதான் கிடைத்தது. சாதுக்களும் சன்னியாசிகளும், மாணவர்களும் இளைஞர்களும், பெண்டிரும், பாலரும், பெரியவர்களும் இன்னோரன்ன பலரும் சிறை புகுந்தார்கள்.

தாங்கள் பெற்றெடுத்த இரு செல்வங்கள் இன்று வருவார்கள் என்று வீட்டு வாசலிலே நின்று வழி பார்த்துக்கொண்டு இரு நரைமூதாட்டிகள் ஆரத்தியும் கையுமாக, 'எங்கள் பிள்ளைகளுக்கு இன்று விடுதலையாமே; அவர்களை வரவேற்கத்தான் நிற்கிறோம்' என்று சொல்ல, அந்த நேரத்தில் ஒருவர் ஓடிவந்து 'ஆம், ஆம்; உங்கள் பிள்ளைகளுக்கு சிறையிலிருந்து மட்டுமல்ல—இந்த உலகத்திலிருந்தே விடுதலை கிடைத்து விட்டது' என்று கூற, அந்த நரைமூதாட்டிகள் கையிலே பிணமேந்தி, 'தமிழ் வாழ்க; தமிழ் வாழ்க; வீழ்க இந்தி!' என்று எழுப்பிய முழக்கம் இன்றும் எங்கள் காதிலே விழுந்து கொண்டுதானிருக்கின்றது.

அத்தனை இடர்பாடுகளையும், இன்னல்களையும் தாங்கிக் கொண்டுதான் அப்பொழுது நாங்கள் இந்தியை எதிர்த்

1938—ல்— இருபதாண்டுகளுக்கு முன்பு—பால்ய குமரியாக இங்கு வந்தாள் இந்திப் பெண்; அந்தக் கட்டிளம் பருவ மங்கையையே ஏற்க மறுத்து விரட்டியடித்தார்கள் இங்குள்ள தமிழர்கள்.

இருபதாண்டுகளுக்கு முன் வந்த இளமங்கையிடமே மயங்கவில்லை தமிழ் வாலிபர்கள். இப்பொழுது இருபதாண்டுக்குப் பிறகு—இன்று இளமை குன்றி—கிழவியாகவரும் அந்த இந்திப் பெண்ணிடம் மயங்கி விடுவார்கள் என்ற தைரியம் அவர்களுக்கு இருக்கிறது; அதனால்தான் இந்தியைப் புகுத்தப் பார்க்கிறார்கள்.

நமது போராட்டம் இந்தித் திணிப்பை ஒழிக்கும் போராட்டமாக மட்டும் இருக்காது; வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு எச்சரிக்கை தரும் கடைதி போராட்டமாகவும் இருக்கும் என்பது உறுதி.

போராட்டம் என்றால், தி. மு. கழகம் பலாத்காரத்திலிறங்காது; கத்தியும் கேடயமும் எடுத்துக் களத்திலிறங்காது; தி. மு. கழகம், ஜனநாயகம் பூத்துக் குலுங்கும் சோலை. பலாத்காரத்தின் வாடை எள்ளளவும் வீசாது. நாம் அறப்போர்கள் பல நடத்தி வெற்றி கண்டிருக்கிறோம்.

தி. மு. கழகம் ஆதி திராவிடர்களுக்கு என்ன சாதித்தது என்று சிலர் கேட்கிறார்கள். 'அரிசனம்' என்ற அடிமைப் பெயரை நீக்கி, 'ஆதிதிராவிடர்' என்ற பெயர் சூட்டியதே திராவிடர் இயக்கம்தான் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்களுக்குள்ள—அந்த ஆதிதிராவிடர் என்ற பெயரிலேயுள்ள திராவிடர் என்பதைத்தான் எங்கள் கட்சிக்கும் வைத்திருக்கிறோம்.

நாங்கள் உங்களுக்கு என்ன செய்யவில்லை? எங்களைத் தவிர உங்களுக்குப் பாடுபட எந்த இயக்கம் இருக்கிறது? என்று கேட்கிறேன். நாங்கள் திராவிடர் கழகத்தினராக இருந்தபோதுதானாகட்டும் — சுயமரியாதை இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரிலே இருந்தபோதுதானாகட்டும் — ஆதி திராவிடர்களுக்காக உண்மையில் பாடுபட்டவர்கள் நாங்கள்தான்—திராவிடரியக்கம்தான்! சில காங்கிரஸ்காரர்கள் பேசலாம்—தாங்கள்தான் ஏதோ சாதித்துவிட்டதாக!

நங்கவரம் போராட்டத்தில் ஈடுபட்டது யார்? அதனால் பலனடைந்தவர் யார்? நங்கவரம் விவசாயிகளில் 100-க்கு 100 பேர் ஆதிதிராவிடர்கள்தான். அவர்கள்தான் பலனடைந்தவர்கள். வேறு நாயக்கரோ, படையாச்சியோ அங்கு விவசாயிகளாக இல்லை.

மந்திரி பக்தவத்சலத்தை கல்லணையில் கண்டேன்; குளித்தலையில் கண்டேன்; சட்டசபையிலும் பலமுறை எடுத்துச் சொன்னேன்; நங்கவரம் விவசாயிகளின் துயரை எடுத்துச் சொல்லி, அதைப் போக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டேன்; நங்கவரத்துக்கு 'வாரீர், வாரீர்' என அமைச்சரை அழைத்தேன்; அதற்கு அமைச்சர், 'நான் என்ன செய்யட்டும்? சட்டத்தில் ஓட்டையிருந்ததால் உயர் நீதிமன்றத்திலே வழக்குப் போட்டிருக்கிறார்கள்; முடிந்தால் நீயே போய்ப் பார்; சமரசத்துக்கு ஏற்பாடு செய்' என்று கூறிவிட்டார். அதன் பிறகுதான், நான் அண்ணாவின் அரிய யோசனைகளைக் கேட்டு, தி. மு. கழகத்தின் துணையோடும் ஆதரவோடும் போராட்டத்தைத் துவக்கினேன்.

வேறு வழியில்லை; விவசாயப் பெருங்குடி மக்களின் கண்ணீர் துடைக்க வேறு வகையில்லை—என்ற இக்கட்டான நிலை பிறந்ததால்தான் அங்கு போராட்டம் தோன்றியது.

அங்கு நாங்கள் யாரை எதிர்த்தோம் தெரியுமா? நாங்களும், பிராமணர்களும் கட்டிப் புரள்வதாக திராவிடர் கழகத்தவர் சொல்லுகிறார்கள்; உண்மையிலேயே நாங்கள் பிராமணர்களோடுதான் கட்டிப் புரண்டோம் என்றால், சாதாரணமாக அல்ல; மல் யுத்தத்திலேதான் இரண்டு பேரும் கட்டிப் புரண்டோம். ஆரியர்களே நிறைந்த பெரிய பண்ணை நங்கவரம் பண்ணை; அந்த நங்கவரம் பண்ணையும் சாதாரணமாகக் கொஞ்ச நிலமுடையதல்ல—'நாடு பாதி, நங்கவரம் பாதி' என்று சாதாரணமாகப் பழமொழி சொல்லுவார்கள். அந்தப் பழமொழிக்கே இலக்கான பண்ணை அது; அந்தப் பண்ணையாரை எதிர்த்துத்தான் தி. மு. கழகம் அங்கே போர்க் கொடி உயர்த்தியது. ஆனால், நாங்கள் விவசாயிகளினுடைய எலும்பைப் பொடி பண்ணி அதைக் கழக வளர்ச்சிக்கு உரமாக உபயோகப்படுத்தவில்லை.

அவர்களது வாழ்வுக்காக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கடுகளவும் குறையாத வகையிலே போராட்டம் நடத்தினோம். வெற்றி கிடைத்தது; நீர் ததும்பிக் கொண்டிருந்த விழிகளிலே களிப்பு தோன்றியது.

இப்படி ஏழைகளின் இன்ப துன்பத்தில் பங்கெடுத்துப் பணியாற்றும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை, நாடு உணரத் தலைப்பட்டு விட்டது. இந்த நேரத்தில், அதன் வெற்றிப் பாதையில் ஒரு சோதனைக் கட்டமாக இந்திப் பிரச்சினை குறுக்கிடுகிறது. எதிர்ப்பு மலையத்தனை இருந்தாலும், துயரத்தைத் தூசென மதித்துச் செயல்படுவோம்; பலனடைவோம்—என்ற உறுதி நம்மிடம் இருக்கிறது!

விற்பனையாளர் தேவை
திராவிட முரசு
[மாதம் இரு ஏடு]
ஆசிரியர்: நா. பூ. ச.
"திராவிட முரசு"
23-97, மாதவரம் நெடுஞ்சாலை
சென்னை—11

சோமநாதபுரத்துச் சிலை . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

லில் வேகமாகத் திரும்பினான் கஜினி. கையில் கட்டாரி ஒன்றை ஏந்தியபடியே ஆவேசத்துடன் நின்று கொண்டிருந்தாள் திலோத்தமா!

"மகராஜ், பெண்களிடம் மரியாதை காட்டும் பண்புடையோர் நீர் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்........ ஆனால் பெண்கள் விஷயத்தில் எல்லா ஆண்களும் ஒரே மாதிரியானவர்கள் என்பதை இப்பொழுதுதான் உணருகிறேன். புவனா என் தங்கை......அவளை நீர் தீண்டினால்......"

ஆவேசத்தோடு கையில் கட்டாரி தாங்கி, தன்னை எச்சரிக்கும் திலோத்தமாவைப் பார்த்து கஜினி கோபம் கொள்ளவில்லை; விஷமமாக அவளைப் பார்த்துச் சிரித்தான். கட்டாரியைப் பிடுங்கும்படி பின்னே நிற்கும போர் வீரர்களுக்குக் கண் ஜாடை காட்டினான். அவர்கள் செயல்படுமுன், திலோத்தமா கட்டாரியை கஜினியின் மார்பின்மீது பலமாக வீசினாள். போர் வீரர்கள் அவளைப் பிடிக்குமுன், அவர்கள் பிடியில் சிக்காமல் ஓடிப் போய் மயங்கிக் கிடக்கும் புவனாவைக் கட்டிக் கொண்டு 'கோ' வென்று கத்தினாள். திலோத்தமா வீசிய கட்டாரி, கஜினியின் மார்பில்பட்டு கணீரென்ற ஓசையோடு தெறித்துக் கீழே விழுந்தது. விழுந்த கட்டாரியை ஒரு கையில் எடுத்துக் கொண்டு, மறு கையால் புவனாவின்மீது விழுந்து கதறும் திலோத்தமாவைப் பிடித்து இழுத்து அப்பால் விட்டு விட்டு "பைத்தியக்காரப் பெண்ணே! உன் கட்டாரி என்னை என்ன செய்யும்...? இந்துஸ்தானத்துப் பெண்கள் வேல்விழிகள் வீசிதான் வேதனை செய்வார்கள் என்று எண்ணியிருந்தேன். அவசியம் ஏற்பட்டால் வாளும் வீசத் தயங்க மாட்டார்கள் என்பதை இப்பொழுதுதான் அறிந்தேன்...நல்ல வேளை...... நான் அணிந்து கொண்டிருக்கும் இரும்புக் கவசம் என்னைக் காப்பாற்றியது...அது கிடக்கட்டும்... நீ யார்? உனக்கும் இந்தப் பெண்ணுக்கும் என்ன உறவு...? தீயிடப்பட்டவள் எப்படி இங்கு வந்தாள்?" என்று கஜினி கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.

திலோத்தமா பேசவில்லை!

"ஏய், நீ என்ன ஊமையா? உன் பெயரென்ன?"

"என் பெயர் திலோத்தமா. நான் இந்தக் கோவிலின் தேவதாசி...புவனா, எனக்கு சகோதரிபோல! ஆனால், அவள் தாசியல்ல...குடும்பப் பெண்...வஞ்சகர்களின் சூதால் இக்கதிக்கு ஆளானவள்...மகராஜ், மற்ற எதுவும் என்னைக் கேட்காதீர்கள்......உங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டது உண்மையானால், புவனாவுக்கு நீங்கள் எந்த விதமான தீங்கும் செய்யக் கூடாது......"

"நீ புவனாவைக் காப்பாற்றுவது ஒரு புறம் இருக்கட்டும்! உன்னை இப்பொழுது காப்பாற்றிக் கொள்ள என்ன செய்யப் போகிறாய்? மாபெரும் மன்னன் கஜினி முகம்மதுவைக் கொலை செய்ய முயன்றதாக உன்மீது குற்றம் சாட்டியிருக்கிறேன். இந்தக் குற்றத்துக்கு தண்டனை என்ன தெரியுமா?.........மரண தண்டனை!"

"மரண தண்டனை! அதைக் கண்டு மிரளும் மன நிலையில் நான் இப்பொழுது இல்லை; மகராஜ்! கட்டாரி வீசிய பொழுதே தண்டனையை விரும்பி ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தில்தான் வீசினேன்.........உங்கள் தண்டனையை மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளுகிறேன்......... ஆனால், என் கோரிக்கையை மட்டும் மறந்து விடாதீர்கள்..."

சங்கல்ப உறுதியோடு பேசும் திலோத்தமாவையே வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான் கஜினி.

"திலோத்தமா, உன் மன உறுதியை நான் மனமாரப் பாராட்டுகிறேன்......நீ செய்துவிட்ட குற்றம் சாதாரணமானதாயிருந்தால் உன்னை மன்னித்திருப்பேன்.......ஆனால்.......ஒரு சலுகை மட்டும் உனக் களிக்கிறேன்......புவனாவைக் காப்பாற்றுவது என்னுடைய கடமைகளில் ஒன்று......அதைப் பற்றி நீ கவலைப்படாதே...உனக்குக் கடைசி ஆசை ஏதாவது இருந்தால் சொல்; கட்டாயம் நிறைவேற்றி வைக்கிறேன்!"

திலோத்தமா நன்றியுணர்ச்சியோடு அவனைப் பார்த்தாள். திடீரென்று அவளுடைய முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி வீசியது.

"மகராஜ், ஒரே ஒரு விண்ணப்பம்—அதை மட்டும் நீங்கள் நிறைவேற்றுவதாக வாக்களித்துவிட்டால் போதும்... என் உயிர் நிம்மதியாக இந்த உடலை விட்டுப் பிரிந்துவிடும்... இஸ்லாமிய வீரர்கள் இந்து சந்நியாசிகளைக் கொடுமைப் படுத்துவதாகச் சொல்லுகிறார்கள்...சோமநாதபுரத்து மண்ணிலே நிர்மலானந்தர் என்ற ஒரு சாது வசிக்கிறார். மதுராபுரி அவருடைய பூர்வீகம்.... தூய்மையும் தொண்டுள்ளமும் கொண்டவர்...உங்களைப் பற்றிக் கூட அவர் பெருமையாகச் சொன்னதாக ஞாபகம்......அவருக்கு நீங்கள் எந்த விதமான தீங்கும் இழைக்கக் கூடாது... இதுவே என் கடைசி ஆசை!"

இதைச் சொல்லி முடித்த பொழுது திலோத்தமாவின் கண்களில் நீர் துளிர்த்தது; கஜினியின் கண்களும் ஈரமாயிற்று.

"திலோத்தமா, உன் ஆசைக்கு கஜினி என்றும் மரியாதை தருவான்...நிர்மலானந்தருக்கு கஜினி முகம்மதுவாலும் அவனுடைய படைகளாலும் எந்த விதமான தீங்கும் ஏற்படாது..."-கஜினியின் குரல் கரகரத்தது. போர் வீரர்கள் திலோத்தமாவை அழைத்துச் சென்றார்கள்!

அவள் கண்களிலிருந்து மறையும்வரை அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் கஜினி.

கஜினியின் மூளையில் பலத்த போராட்டமொன்று நிகழ்ந்து கொண்டிருந்தது. புவனாவும் திலோத்தமாவும் அவனுடைய இதய அரங்கில் மாறி மாறி சதிராடிக் கொண்டிருந்தார்கள். இந்துஸ்தானத்தில் வாழ்கின்ற அத்தனை பெண்களிடமும் அவனுக்கு மதிப்பு தோன்றியது. அன்புக்கு ஆட்பட்டு அவர்கள் காட்டிடும் மகத்தான தியாக உணர்ச்சி அவனுடைய உள்ளத்தை நெகிழ வைத்தது. அவன் வென்ற நாடுகளில் பல பெண்களைப் பார்த்திருக்கிறான். ஆனால், அவர்களுக்கும் இந்தப் பெண்களுக்கும் எவ்வளவு வேறுபாடு! அழகுமட்டும் இவர்களுடைய சிறப்பாக இல்லை. புற அழகோடு அக அழகும் சேர்ந்து இவர்களை அபூர்வப் பிறவிகளாக்கி விடுகின்றன. ஆண்களிடம் இவர்கள் காட்டும் அன்பு தெய்வீகமானது; அப்பழுக்கற்றது; மாசு மருவற்ற இவர்களுடைய அன்புள்ளம் எவ்வளவு சீக்கிரமாகத் தியாகத்தின் எல்லையை எட்டிப் பிடித்து விடுகிறது! வாழ்க்கையில்—அரச காரியங்களில்—அவனுக்கு வழிகாட்ட இப்படிப்பட்ட ஒரு பெண் கிடைத்துவிட்டால்...? கஜினி... நினைவு வெள்ளத்தில் மூழ்கினான்!

நேரம் போனதே தெரியவில்லை. கோயிலின் செல்வத்தை துப்புரவாகக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள் முகம்மதிய வீரர்கள்.

பெருமூச்சு விட்டுக் கொண்டே கஜினி எழுந்தான். புவனா இன்னும் கண்விழிக்கவில்லை. ஆவலோடு கட்டிலின் அருகே சென்றான். மூக்கின் அருகில் கையை வைத்துப் பார்த்தான். மூச்சு வந்து கொண்டிருந்தது. அவளை அப்படியே தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு படிகளில் இறங்கினான். மண்டபத்தை அடைந்தவுடன் தூணில் தொங்கிய தலைமைப் புரோகிதனின் சவம் கஜினியை வரவேற்றது. சவத்தின்மேல் ஒரு முறை காறி உமிழ்ந்தான். திடீரென்று அவனுடைய மனதில் ஒரு பிரமை தோன்றியது.........புரோகிதன் தொங்கியதைப்போல் திலோத்தமா...!கஜினியின் உள்ளம் பகீரென்றது...அவன் தலை சுழன்றது...கோவில் மேலும் கீழும் ஆடியது...புவனாவைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான்.

உறவும், உதாசீனமும்!

"அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் சொன்னார்—'காமராசர் பெரியாரைப் போய்ப் பார்க்கமாட்டார்'—என்று அழுத்தந் திருத்தமாக அதைச் சொன்னார்.

"தேர்தலுக்கு முன்னால் 'காமராசர் இங்குதான் உட்கார்ந்திருந்தார்; இந்த நாற்காலியில்தான் அமர்ந்திருந்தார்'-என்றெல்லாம் சொல்லி, அந்த இடத்திலே யெல்லாம் திராவிடக் கழகத் தோழர்கள் பூசை செய்யக்கூடிய அளவுக்கு பக்தி கொண்டிருந்தார்கள்—இன்னும் இருக்கிறார்கள். தேர்தலுக்குப் பிறகு, காமராசர் ஏன் போய் பெரியாரைச் சந்திக்கவில்லை? தேர்தலுக்குப் பிறகு அவர் தேவையில்லை—எனவே, சந்திக்கவில்லை.

"முரட்டுக் கணவன்மார்கள், தேவைப்பட்ட நேரத்தில் உள்ளே சென்று மனைவியிடம் பேசி, கொஞ்சிவிட்டு தெருத் திண்ணையிலே வந்து படுத்துக்கொள்கிறார்களே, அவர்களுக்கும்—காமராசருக்கும் என்ன வித்தியாசம்?

"காமராசர் பெரியாரைச் சந்திக்க வேண்டுமென்று நான் சொன்னதற்கு, அமைச்சர் சொன்ன பதில் வெட்கப் படக் கூடியதாகும். 'பெரியாருக்குக் காமராசர்மீது ஆசை; ஆனால் காமராசருக்குப் பெரியார்மீது ஆசை இல்லை' என்றார், அவர். இதற்கு என்ன பொருள்?

"அதன் பிறகுதான் அவர் சொன்னார்—'அண்ணாதுரையே பெரியாரைப் போய்ப் பார்த்து, சமரசம் செய்யவேண்டும்'—என்று!

"நான் போக மாட்டேன் என்று சொல்லவில்லை; பெரியாரிடத்திலே இன்று தொத்திக் கொண்டிருக்கும் பிள்ளைகளும், தத்துப் பிள்ளைகளும், நான் அவர் வீட்டுக்குள்ளே நுழைந்தால் வழி விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்; சமரசம் பேசவும் முடியும்; ஆனால், அதுவரை சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அதைக் கேட்டதும் அமைச்சருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை; சட்டத்தை நிறுத்தி வைக்கவும் முடியவில்லை; இக்கட்டான நிலைமை ஏற்பட்டது அவருக்கு! காரணம் சட்டசபை இப்படிப்பட்ட சட்டங்களைக் கண்டதில்லை; சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது; காரணம் சட்டத்தை நிறுத்தி வைக்கும் அளவுக்கு என் கரத்துக்கு வலுவு இல்லை.

"நான் நெஞ்சத் தூய்மையோடு சொல்லிக் கொள்கிறேன்—15 பேருக்குமேல் அதிகம் சட்டசபைக்கு வந்திருந்தால் இந்தச் சட்டம் வந்திருக்காது.

"இந்தச் சட்டத்தை, எங்களைத் தவிர வேறு எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை.

"சர்க்கஸ்காரர்கள் புலிகளுக்கு நடுவே புள்ளி மான்களை நிறுத்துவதுபோல, நாங்கள் மட்டுமே அத்தனை பேருக்கும் மத்தியில் நின்று சட்டத்தை எதிர்த்தோம்.

—அறிஞர் அண்ணா

சொல் வேறு; செயல் வேறு—

பண்டிதர் பாராளும் முறை காணீர்!

“ஒரு நாட்டை இன்னொரு நாடு மதிப்பதென்பது அந்நாட்டின் நில வளத்தையோ, மலை வளத்தையோ கொண்டு அல்ல; அந்நாட்டு மக்களின் மன வளத்தைக் கொண்டுதான்” என்று பேரறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் மனவளம் உடையவர்களாக வாழ வேண்டுமென்றால் அவர்களின் உள்ளங்களெல்லாம் நல்லெண்ணங்கள் மலரும் சோலையாகத் திகழ வேண்டும். அச் சோலையின் வளர்ச்சிக்கு அறிவு வெள்ளமும், ஆர்வ எருவும் அவசியம் தேவை.

“இக்கால மக்கள் மூன்றாவது இந்தியாவின் வாயிலில் நிற்கிறார்கள். இரண்டாவது இந்தியாவை விட்டு மூன்றாவது இந்தியாவுக்கு வரவேண்டும். இரண்டாவது இந்தியா சாதி முறை, சனாதனம், குருட்டு நம்பிக்கை, குறுகிய மனப்பான்மை, வைதீகம், பிற்போக்கு இவைகளைக் கொண்டது புதிய எண்ணங்களின் வளர்ச்சியைக் கண்டு பயப்படும் காலம் ஆரம்பமானது. பயம் பலவீனத்தின் அறிகுறியாயிற்று. மனித உள்ளம் சுருங்கிக் குறுகிற்று. சமூகம், ஆயிரக் கணக்கான சாதி சமய வேறுபாடு என்ற இரும்புத்திரை விழுந்தது. யாரோடு உண்டு வாழ்வது என்பதுதான் இன்றைய உலகத்தின் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இக் குறுகிய எண்ணங்களைக் காப்பாற்ற பலமான சமுதாயக் கட்டுப்பாடுகள் உருவாகின்றன. சாதிச் சின்னங்களாக நெற்றியில் நாமம் போடுவது; விபூதி பூசுவது ஆகியவை மூலம் மற்றவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளப் பார்க்கிறார்கள்”

என்று இந்திய முதல்வர் பண்டித நேரு அவர்கள் நவம்பர் திங்கள் முதல் நாள் டில்லியில் நடைபெற்ற பல்கலைக் கழக மாணவர் விழாவில் சொற்பெருக்காற்றும் பொழுது குறிப்பிட்டுள்ளார். விழாவுக்கு இந்தியத் துணைக் கண்டத் தலைவர் பாபு இராசேந்திரபிரசாத் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்துள்ளார்கள்.

பண்டிதருடைய பேச்சு நம்மை மகிழ வைக்கிறது எனினும் நமது பாராட்டுகளைப் பெறவில்லை. காரணம், இது முதற் தடவையல்ல; இது போல பலமுறை பேசியுள்ளார். ‘குடிகாரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு’ என்ற அளவுக்குத்தான் அவர் பேச்சு இருந்திருக்கிறதே தவிர, வேறல்ல. அன்று விழாவுக்குத் தலைமை தாங்கிய இந்தியாவின் தலைவர் காசியில் பார்ப்பனர்களின் காலைக் கழுவி ‘தீர்த்தம்’ குடித்தவர் என்பதை நாடு மறக்கவில்லை. தென்னகத்திலே புயல் வீசி மக்கள் தேம்பும் முகத்தோடு செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் இராமேச்வரம் வந்து கடலாடி வடநாட்டு பண்டாவுக்குத் தங்கத்தாலான வில் அம்பு பரிசாகத் தந்து தன் பக்தியைத் தெரிவித்துக் கொண்டவர் அவர். அவர் தலைமையில்தான் பண்டிதர் இதைப் பேசியுள்ளார்.

இதுமட்டுமல்ல; 1954, ஆக்டோபர் திங்களில் கேரளத் திருநகராம் கொச்சியில், “நமது நாட்டில் ஏனிந்த நட்சத்திரங்களைக் கட்டிக் கொண்டு மக்கள் அழுகிறார்களோ எனக்குப் புரியவில்லை! நட்சத்திரங்களின் நடவடிக்கைக்கும், மனிதனின் காரியங்களுக்கும் என்ன சம்மந்தமோ? அப்படி ஏதாவது சம்பந்தமிருந்தால் நம்மைப்பற்றி அவைகள் கவலைப் படட்டுமே! ஜோசியர்களை நாடி ஓடுவது இப்போது அதிகமாகி வருகிறது. ஜோசியர்கள் பாடு யோகம்தான்,” என்று பண்டித நேரு உரை நிகழ்த்தியுள்ளார். அவர் இந்த புரட்சிக் கருத்துக்களை அள்ளி வீசிய அதே ஆண்டு, அதே மாதம் 14-ம் நாளில் புதுடில்லியில் கூடிய அகில இந்திய பத்திராதிபதிகள் மாநாடு ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அது இது:

“நாடு முழுமையும் ராசி பலன் பார்ப்பதென்பது சர்வசாதாரணமாக இருப்பதால் அவைகளை வெளியிடுவதில் எவ்விதத் தீங்குமில்லை. எனவே பத்திரிகைகள் யாவும் தாராளமாக வெளியிடலாம் என்று கருதுகிறோம்.”

—இப்படி பண்டிதருக்குப் பாரறிய விளம்பரம் தருகின்ற பத்திரிகைகள், மாநாட்டிலே முடிவெடுக்கின்றன. என்ன பொருள் இதற்கு?

பத்திரிகைகள் மட்டும் பண்டிதர் கருத்துக்கு எதிரிடையான முடிவைச் செய்யவில்லை. பண்டிதரிடம் பணிந்து நடந்து, குனிந்து பழகும் சென்னை நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் அதே ஆண்டிலேயே சென்னையில், “பரமனை உணர்ந்து, மதநூல்களைப் பயில்வதால் நமக்குக் கலப்பற்ற நிரந்தர இன்பம் கிட்டுகிறது” என்று பேசியுள்ளார்.

பண்டிதர் கண்டிக்கின்ற பழமைக் கொள்கைகளை பேணி நடப்பதன் மூலம் பெறற்கரிய ‘கலப்பற்ற நிரந்தர இன்பம்’ கிடைக்கிறதாம் — செப்புகிறார் சுப்பிரமணியனார். பண்டிதர் சாக்கடை நாற்றம் என்பதை இவர் சவ்வாது மணம் என்கிறார்.

அது மட்டுமா?

1954-ம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் பண்டித நேரு ஆமதாபாத்தில் ஆடைத் தொழில் ஆராய்ச்சி நிலையக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்துள்ளார். அப்பொழுது கட்டிடத்தினுள் நுழைகின்ற வேளையில் அடுத்தடுத்து நடந்த வைதீகச் சடங்குகள் பண்டிதரைப் பொறுமை இழக்கச் செய்திருக்கின்றன. புரோகிதரின் கையால் பண்டிதர் தனது நெற்றியில் திலகமிட்டுக் கொண்டார். அப்படியிருந்தும் வளர்ந்து கொண்டிருக்கும் சடங்குகளைப் பார்த்து வருந்தி, புரோகிதரின் தோளைத் தொட்டு உலுப்பி, “போதும், இனிமேல் சகிக்க முடியாது!” என்று ஆத்திரம் கலந்த குரலில் இரைந்து விட்டு அரைகுறைச் சடங்குகளோடு அறையினுள்ளே நுழைந்து விட்டாராம். உள்ளே நுழைந்த பண்டிதர் தனது சொற்பொழிவில் கொதித்துக் கொண்டிருந்த தன் உள்ளத்தை விரித்து வைத்துள்ளார். “பழம் பெருமைகளைப் பேசி நம் பிற்பட்ட நிலையைக் களைய முடியாது. மக்களை அழுத்தி வைத்திருக்கும் மூட நம்பிக்கைகளை வேருடன் களைய வேண்டும்” என்று உணர்ச்சியோடு உரைத்தாராம்.

இவைபோல பலமுறை பழமைக் கொள்கைகளைக் கண்டித்துப் பேசியுள்ளார். அண்மையில் ஒரு கூட்டத்தில் இந்திய மக்களை ‘சாணிப் புத்தி’ உடையவர்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் இப்படியெல்லாம் பன்னிப் பன்னிப் பேசுகின்ற பண்டிதர் சில ஆண்டுகளுக்கு முன்னால் பூணூலைப் பிடித்துக் பூசுரர் முன்னால் உட்கார்ந்து தர்ப்பணம் செய்த காட்சியைப் பத்திரிகைகளில் படமாகப் பார்த்தோம். வடநாட்டிலே நடந்த கும்பமேளாவில் கலந்து மகிழ்ந்த காட்சியைத் திரைப் படங்களிலும், தின இதழ்களிலும் நாம் கண்டோம். “படிப்பது இராமாயணம்; இடிப்பது பெருமாள் கோயில்” என்ற பழமொழிக்கேற்பதான் பண்டிதருடைய வாழ்வு அமைந்திருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகள்.

“பசுவை குதிரை போலவே நான் கருதுகிறேன்” என்று பண்டிதர் பேசியதால் இந்து மதத்தினரின் உள்ளங்கள் புண்பட்டிருப்பதாகக் கூறி சீதாராம் செம்கா என்ற ஐக்கிய மாகாணவாசி ஒருவர் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். கீழ்க் கோர்ட்டில் வழக்கை எடுக்காத காரணத்தால் பண்டிதரின் பிறந்த நாளன்று உயர்நீதி மன்றத்தில் அவரை குற்றவாளியாக்கியிருக்கிறார் சீதாராம் செம்கா. அந்த அளவுக்கு மதவெறி பிடித்தலைகிறது வடநாடு. 12-11-1957-ல் வெளியான ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ என்ற வடநாட்டு ஆங்கில நாளிதழ் பம்பாய் மாநிலத்தில் தன் மகனை ஈன்ற தாய், அவனை, மகள் உட்பட ஒன்பது பெண்கள் ஒன்று சேர்ந்து மாந்திரீக சக்தி பெற வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகக் கொலை செய்து, கறி சமைத்து உண்ட செய்தியை வெளியிட்டுள்ளது. அதுபோலவே வடநாட்டில் ஒருவர், தன் மனைவியைப் பந்தயம் கட்டி சூதாடித்தோற்று, வெற்றி பெற்றவனோடு தன் மனைவியை அனுப்பி விட்ட செய்தியையும் படித்தோம். தாரத்தை பணயம் வைக்கும் தருமனையும், தன் குழந்தையைக் கறி சமைக்கும் சிறுத்தொண்டரையும் இருபதாம் நூற்றாண்டிலும் வடநாட்டில் காண முடிகிறது. இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம் புராண இதிகாச ஆகமங்கள் மக்கள் இதயத்தில் வேரூன்றி நிலைத்து விட்டதால்தான் என்பதை யார் மறுக்க முடியும்?

1956, ஜூலைத் திங்கள், 15—ம் நாள் ஆமதாபாத்தில் ஒருவன் தன் பக்தியை வெளிக்காட்டும் பொருட்டு கத்தியால் தன் கழுத்தையே கோயிலினுள் நின்று அறுத்துக் கொண்டானும்.

அதே நாளில் சென்னை தியாகராய நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் “பக்திதான் முக்கியம்—அறிவு அல்ல” என்று உபதேசமருளியிருக்கிறார். ஆண்டிகள் நடத்த வேண்டிய வேலைகளை ஆள்வோர் நடத்துகின்ற வேதனை இன்னும் இம் மண்ணில் ஏற்பட்டுள்ளது. 1957, அக்டோபர் முதல் வாரத்தில் சென்னையில் கூடிய வானொலி அமைப்புக் குழுவினர் ‘வானொலி மூலம் பக்தி பிரச்சாரம் செய்யப்போவதாக’ தீர்மானித்துள்ளனர். பண்டிதர் நாட்டு மூலைமுடுக்குகளிலும்கூட பகுத்தறிவுப் பிரச்சாரம் நடத்துகிறார். அவருடைய அரசாங்கம் விஞ்ஞானம் வகுத்துத் தந்த வானொலி மூலம் பக்திப் பிரச்சாரம் செய்ய திட்டம் தீட்டுகிறது. காஞ்சி கோயிலில் வனமகோற்சவத்தை யொட்டி திரு. முன்சி நட்ட துள்சிச் செடியும்—இங்கிலாந்தில் புதிய கப்பலை வெள்ளோட்டம் பார்க்கும்போது புரோகிதர் மந்திரம் உச்சரிக்க, கப்பலுக்கு மாலை, குங்குமம் அணிந்து திருமதி. விசயலட்சுமி அம்மையார் உடைத்த சூறைத் தேங்காயும்-இவைபோன்ற பலவும் இந்திய அரசாங்கத்தின் சமயச் சார்பற்ற தன்மையை உடைத்தெறிகின்றன.

வேத இதிகாச ஆகமங்களின் முதல் நூலாகிய மனு நீதிதான் இவர்கள் வகுத்து வைத்திருக்கின்ற அரசியல் சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. 1956—ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்த வழக்கொன்று இதைத் தெளிவாக்குகிறது. புரோகிதர் ஒருவரின் சம்பாத்தியத்தின் காரணத்தால் எழுந்த வழக்கொன்றில் சென்னை உயர்நீதி மன்ற

[தொடர்ச்சி பக்கம்—12]

அறிவிப்பு

ஓவிய விற்பன்னர்கள் மாதவம் பிள்ளை, பாலு பிரதர்ஸ், அய்க்கன் எழுதிய பொங்கல் வாழ்த்து டிசைன்கள் (22 கொண்டது) விற்பனைக்குத் தயார். மாதிரி வேண்டுவோர் ரூ. 3—00 எம். ஓ. செய்யவும்.

பகுத்தறிவுப் பண்ணை
தஞ்சை

'ஜுபிலி'யின் புதிய படம்!

'மர்ம வீரன்' படத்தைத் தயாரித்த 'ஜுபிலி' பிலிம்சார் இப்போது அதிகப் பொருட் செலவில்; வைஜயந்தி மாலா போன்ற நட்சத்திர நடிகர்களைக் கொண்டு 'கல்கி'யின் 'பார்த்திபன் கனவை'ப் படமாக்கி வருகின்றனர்.

விந்தன் வசனம் அமைத்து, டி. யோகானந்த் டைரக்ட் செய்யும் இந்தப் படம் பாதிவரை வளர்ந்திருக்கிறது.

அதற்கிடையில் தங்களது மூன்றாவது தயாரிப்பாக சமூகப் படமொன்றை உருவாக்க துவக்க வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தப் படத்தில் இலட்சிய நடிகர் ராஜேந்திரன் முக்கிய பாத்திரத்தில் நடிப்பார். டி. யோகானந்த் டைரக்ட் செய்யும் இந்தப் படத்திற்கான திரைக்கதை வசனத்தை 'முரசொலி' மாறன் எழுதுகிறார்.

OOO

அதிரூப அமராவதி

சென்னை நியூட்டோன் ஸ்டுடியோ தமிழ் நாட்டுப் பட உலகின் ஆரம்ப கால நிறுவனமாகும். இப்போது அவர்கள் விஜய் ஹிந்த் புரொடக்ஷன்சாரோடு சேர்ந்து 'அதிரூப அமராவதி' படத்தைத் தயாரிக்கின்றனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., பானுமதி, எம். ஜி. சக்ரபாணி, வீரப்பா, சந்திர பாபு ஆகியோர் நடிக்கும் இந்த நட்சத்திரப் படத்தை ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்கிறார்.

படம் நியூட்டோன் ஸ்டுடியோவிலேயே தயாரிக்கப்படுகிறது. படப்பிடிப்பு வேலைகள் வேகமாக நடந்து கொண்டு வருகின்றனவாம்.

OOO

இன்னுமொரு 'இராமாயணம்'!

போட்டியிருந்தால்தான் விறுவிறுப்பு இருக்கும் என்றுதானோ என்னவோ இன்னுமொரு ராமாயணம் உருவாக இருக்கிறது!

இவற்றுள் எம் ஏ. வி. பிக்சர்சார் 'சம்பூர்ண ராமாயண'த்தைப் படமாக்குவது தெரிந்ததே. ஆனால் இராவணன் சம்மந்தப்பட்ட மட்டிலும் சிறு மாற்றங்களைக் கொண்ட 'இலங்கேஸ்வரன்' நாடகத்தை பம்பாயில் டைரக்டர் எம். வி. ராமன் படமாக்க உத்தேசித்திருக்கிறாராம். மனோகர் நடிக்கப்போகும் இந்தப் படம் முழுதும் வர்ணத்திலேயே எடுக்கப்படலாமென்றும் தெரிகிறது!

OOO

ஸ்டுடியோக்களின் உரிமை மாற்றம்!

இந்தியாவிலேயே அதிக மான—உயர்வான படப்பிடிப்பு சாதனங்கள் கொண்டிருக்கிற ஸ்டுடியோக்கள் சிலவற்றுள் சென்னையின் வாஹினி ஸ்டுடியோவும் ஒன்றாகும். அதோடு ஆசியாவிலேயே முதலாவதான மிகப் பெரிய ஸ்டுடியோ என்ற பெருமையும் அதற்குச் சேர்ந்திருக்கிறது. ரேவதி ஸ்டுடியோவையும் அவர்கள் தற்போது விலைக்கு வாங்கி விட்டார்கள். அதில் சில மாற்றங்கள் செய்து விஜயா ஸ்டுடியோ என்று மாற்றுப் பெயர் தந்து படப்பிடிப்பு வேலைகள் துவங்க இருக்கிறார்கள்.

அதுபோலவே, பரணி ஸ்டுடியோவும் தற்போது நிர்வாக மாற்றம் அடைந்திருக்கிறதாம். மதருஸ் பிக்சர்ஸ் அதிபரான திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்கள் மூன்று வருட காலத்திற்கு அதை குத்தகைக்கு எடுத்திருக்கிறார்.

ஏ. எல். எஸ். பிக்சர்சாரது சொந்தத் தயாரிப்புகள் இனி பரணியிலேயே நடைபெறும்!

OOO

கலைவாணரின் 50-வது பிறந்த தினவிழா!

மறைந்தும் மறையாத கலையுலகக் காவலர் என். எஸ். கே. அவர்களின் 50-வது பிறந்ததின விழா சென்ற 28-11-57 அன்று சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 'கலைவாணர் காட்டிய பாதையும், ஊட்டிய ஆர்வமும்தான் எங்களது இன்றைய மூலதனம்; எங்கள் கலைத் தொண்டின் கரு' என்று அன்னாரது தொண்டு பற்றிக் குறிப்பிட்டார்கள், விழாவிலே பங்கெடுத்துக் கொண்ட திரையுலகக் கலைஞர்கள். நடிகர் சங்கத் தலைவர் திரு. என். எஸ். நாராயணன் (பிள்ளை) அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்ட விழாவிலே தோழர் இறை முடி மணி தீட்டிய "தளபதி" என்ற நாடகம் என். எஸ். கே. நாடக சபையினரால் நடிக்கப்பட்டது.

பிறைவானம்....

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

எங்கள் மாளிகையை விட்டு வெளியேறினேன். ஓடினேன். என் கால்கள் என் அனுமதியின்றி ஓடிக் கொண்டிருந்தன. எங்கே? களத்துமேட்டுப் பள்ளச் சேரிக்குத்தான்! சந்திரன் மேக மண்டலத்திலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்தான்!

அதோ, ஆற்றங்கரை மணல் மேடு—அங்குதானே நானும் என் தங்கையும் மணல்வீடு கட்டி விளையாடுவோம்! அங்கு நின்று பார்த்தால் களத்து மேட்டுப் பள்ளச்சேரி நன்றாகத் தெரியும்! நான் தாவி ஏறினேன், மணல் மேட்டின் மேல்! களத்து மேட்டை நோக்கினேன். ஐயோ......என்ன சொல்வேன்? அங்கே களத்துமேடு தெரிந்தது; ஆனால் அதிலிருந்த குடிசைகளைக் காணோம்!, 'ஜாதிப் பித்து பிடித்த வெறியர்கள் எங்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள், பாருங்கள்' என்று சொல்லிக் கொண்டு குவியல் குவியலாக நின்று கொண்டிருந்தன, சாம்பல் மேடுகள்!

நான் "வள்ளி!" என்று அலறினேன். என் குரல் எதிரொலிக்கக்கூட தடுப்பில்லை; காற்றோடு கலந்து மறைந்தது!

என் தங்கை எங்கே போனாள்? ஜாதி வெறி அவளைப் பலி கொண்டு விட்டதா? கொடியவர் மூட்டிய தீயிக்கு சாகாமலே இரையாகி விட்டாளா? சுதந்திர தீபம் சுடர் விட்டு ஜெகஜோதியாய் பிரகாசிக்கிறது! என்றாரே; 'இந்தப் பிரபஞ்சத்துக்கெல்லாம் ஒளியைத் தருகிறது' என்றாரே பேச வந்தப் பெரிய மனிதர்—அந்த ஜோதி என் வள்ளியையும் சுட்டுக் கருக்கி சாம்பலாக்கி விட்டதா? ஐயோ...ஜாதியே... நீ சுமத்தும் கொடுமையே...... உனக்கு இரக்கமில்லையா?...உன் கொடும் பசிக்கு இந்த ஏது மறியா ஏழைகள்தானா கிடைத்தார்கள்?......பசுஞ் சோலையைப் பாலைவனமாக்கி விட்டாயே!... குடிசைகளைச் சாம்பல் மேடுகளாக்கி விட்டாயே! உலகிலே எங்கும் உனக்கு இடமில்லை என்று இங்கு வந்தாயா? அதனால்தான் இப்படி கோரத் தாண்டவம் புரிகிறாயா? என்னே கொடுமை!...

நான் உணர்ச்சி வசப்பட்டு ஏதேதோ கத்தினேன்—"வள்ளி" என்று அலறினேன்!

"அண்ணா...!"

"வள்ளி!..."

"பாபு அண்ணா!..."

யார் பதில் கொடுப்பது? தீயோடு கருகிப்போன என் வள்ளியின் 'ஆவி' பேசுகிறதா? அல்லது குழம்பிப்போன என் மூளையிலே புதிய பிரமையா?

நான் நம்பவில்லை — மறுபடியும் கத்தினேன். அதற்குள் என் கண்கள் எதையோ கண்டு விட்டன. ஆற்றங்கரை மணல் மேட்டுக்கு அருகிலே இருந்த ஆலமரத்து அடியிலே நெளிந்து கொண்டிருந்த ஓர் உருவத்தை நான் பார்த்து விட்டேன். யார் அது? ஓடினேன்......

நிலவொளியிலே தட்டுத் தடுமாறி எழுந்து நின்ற அந்த உருவம் "பாபு அண்ணா!" என்று மறுமுறை குரல் கொடுத்தது.

வள்ளிதான்...நான் "வள்ளி!" என்று அலறிக் கொண்டே அருகில் ஓடினேன்.

"எங்கே அண்ணா நிற்கிறாய்?"

"உன் எதிரில்தானே நிற்கிறேன்—தெரியவில்லையா, வள்ளி?..."

"ஐயோ.......தெரியவில்லையே பாபு...தெரியவில்லையே!..."

என் நெஞ்சிலே ஆயிரம் ஈட்டிகள் ஒரு சேரப் பாய்ந்ததைப் போன்ற அதிர்ச்சியுற்றேன்.

தேர்வுக்கென்று இரவு பகலென்று பாராது கண் விழித்து உடல் வருந்தப் படித்தவன்; தேர்விலே மகத்தான வெற்றியடைந்த செய்தி வருமுன், கடும் உழைப்பால் கால்மாகி விட்ட கதைதான் அப்போது என் கண்முன் நடந்து விட்டது!

என் தங்கையின் இருவிழிகளிலும் பார்வையில்லை! 'சாதியை ஒழித்தோம்; சமத்துவம் கண்டோம்' என்று முழங்கும் 'சுதந்திர ஜோதி'யிலே அவளது கண்களின் ஒளியும் கலந்து விட்டது! பிரபஞ்சத்திற்கெல்லாம்" ஒளிதர அந்த ஏழையின் உதவியும் தேவைப் பட்டிருக்கிறது போலும்!

'உணவுக்கு வழிதேட அடுப்பிலே தீ மூட்டிக் கொண்டிருந்தாள் அன்னை; அதே நேரம் உயிருக்குக் குழிதோண்ட வீட்டுக்குத் தீ மூட்டி விட்டார்கள், 'உன் சாதி கீழ்; உனக்கெதற்கு வாழ்வு' என்று பகை கொண்டாடிய பாழ் நெஞ்சினர். தீயிலே நான் செத்திருக்கக் கூடாதா? பார்வை பறிபோய் பரிதவிக்கிறேனே!' என்று புலம்பினாள் வள்ளி.

விழியற்ற கண்கள் நீரைச் சொரிந்தன.

நான் வீடு திரும்பினேன்—வள்ளியுடன்தான். ஆனால் வீட்டிலே தந்தை இல்லை—இந்தக் கேடுகெட்ட செயல்களுக்கெல்லாம் அவர்தான் காரணம் என்று போலீசார் அவரைக் கைது செய்து கொண்டு சென்று விட்டார்கள் என்ற மகிழ்ச்சியான செய்திதான் எனக்குக் கிடைத்தது!

★

கண்ணிழந்த வள்ளி தன் அண்ணனை இழக்கவில்லை—

தந்தையை இழந்த நான் என் தங்கையை இழக்கவில்லை—

ஆனால், மனிதாபிமானம் இழந்த இந்நாட்டின் மக்கள் ஜாதிப்பித்தை இன்னும் இழக்கவில்லை; அமைதியை, நிம்மதியை இழந்து தவிக்கிறார்கள்!

'பிரபஞ்சத்துக்கெல்லாம் ஒளியைத் தருகின்றதாமே—அந்த சுதந்திர ஜோதி' இந்த இருளை அகற்றுமா? அல்லது கொடியவர்களின் நெஞ்சினைப்போல் இருளடைந்து போகச் செய்யுமா?

—சொர்ணம்.

பொங்கல் வாழ்த்துக்கள்

கண்ணைக் கவரும் பொங்கல் வாழ்த்துக்கள் கிடைக்கும். குறைந்த விலை—விற்பனையாளர்கள் தேவை. மாதிரிக்கு 50 புதுக்காசுகள் தபால் - தலை தேவை.

முத்துப் பதிப்பகம்,
842, ஆட்டுமந்தைத் தெரு,
தஞ்சாவூர்

'சுதந்திர ஜோதி'

என்னை யார் என்று உங்களுக்குத் தெரிகிறதா? தெரிந்திருக்கலாம்; இருந்தாலும் இப்போது அடையாளம் தெரிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்லவே! நான் எவ்வளவு மாறிவிட்டிருக்கிறேன்! என்னைப் பற்றி—என் வேதனையைப் பற்றி சொல்லப் புகும்போது—நீங்கள் கேட்கத் துணியும்போது—நான் யார் என்பதைச் சொல்லிவிடத்தான் வேண்டும்! இதிலென்ன வெட்கம்!

“அதோ போகிறது பார்த்தாயா, கருப்பு நிற புதிய கார்—அதிலே போகிறான் பார்த்தாயா 'சில்க்' சட்டை அணிந்த சிறுவன் ஒருவன் — அவன் யார் தெரியுமா? இந்த ஊருக்குப் பெரியவர் இருக்கிறாரே, மூன்று மாடி மாளிகைவாசி அவரது அருமந்தப் புத்திரன்தான்!”

—இப்படித்தான் என்னைப் பற்றி ஊரார் பேசுவார்கள்.

“அப்பன் அகிலத்திலும் கிடைக்காத துரோக வித்து—மகனோ அன்பு நெஞ்சத்தவன்!”

—இப்படித்தான் என் குணத்தை எடை போடுவார்கள்!

இப்படிப்பட்ட சொற்களில் என்ன பொருள் புதைந்து கிடக்கிறது என்பது எனக்குத் தெரியாது; தேடிப் பார்த்ததும் இல்லை; அப்படி ஆராய்ந்தாலும் எதுவும் கிடைத்திருக்காது என்றே நான் நினைக்கிறேன்.

நான் பள்ளியில் படிப்பவன்; பலரோடும் பழகுபவன்; எனக்குத் தெரியாத அந்தப் 'பொருள்'கள் எல்லாம் எப்படியோ வள்ளிக்கு மட்டும் தெரிந்திருந்தது. இத்தனைக்கும் அவள் பள்ளிக்கூடத்தையே எட்டிப் பாராதவள்தான்!

“பாபு! நீ பெரிய அதிர்ஷ்டசாலி—உனக்கு கார் உண்டு; மாளிகை உண்டு; பணம் படைத்த அப்பா உண்டு! ஆனால்...என்னைப் பார்; அப்பா செத்து ஐந்து வருஷமாச்சு! வயலிலே — வெயிலிலே — மாடு போல் உழைக்கும் அம்மாதான் உண்டு! அதனால்தான் நம்ம ரெண்டுபேரும் சேரக்கூடாதுங்கிறேன்!” என்பாள் வள்ளி, திடீரென்று!

“ஏன் வள்ளி, சேரக்கூடாது?” என்று கேட்டேன் நான்.

“இது கூடத் தெரியலியா உனக்கு? நீ வேற சாதி—உசந்த சாதி; நான் வேற சாதி—கிழான சாதி! பாலும் நீரும் ஒன்றாக முடியுமா, பாபு?”

நான் விழிப்பேன். 'பாலையும் நீரையும் ஒன்றாகக் கலந்துதானே விற்பனை செய்கிறார்கள்' என்று கேலியாகக் கூட பேசி நான் தப்பித்ததில்லை!

இப்படி என்னைப் பலமுறை தோற்கடித்த வள்ளியைக் காட்டு—என்கிறீர்களா? நான் அவளை எங்கே சென்று காட்டுவேன்? அவள் எங்கே போனாள்?

நான் ஒருவன்தான் என் தந்தையின் ஏக போக வாரிசு—எனக்கு உடன் பிறந்த தங்கையோ; சுற்றத்து முறைத் தங்கையோ யாருமே யில்லை. அன்பால்—பழகும் பண்பால்—எனக்குக் கிடைத்த ஒரே தங்கைதான் அந்த வள்ளி! ஆனால் எங்களது அந்த சகோதரப் பாசத்திற்குக் குறுக்கே—மாபெரும் பள்ளமாக 'சாதி' நிற்கிறதே என்று அஞ்சுவாள், அவள். இப்போது எங்கேயோ போய்விட்டாள்—அந்தப் பயங்கரக் குழியிலே விழுந்து, அழிந்து, மறைந்து, மண்ணோடு மண்ணாகிவிட்டாளா?

“நம் பாரத ராஜ்யத்தின் சுபிட்சத்திற்குக் குறுக்கே நிற்கிறது சாதி ஒன்றுதான் என்கிறார்கள் சிலர். அதுமாயா ஜாலப்பேச்சு!

ஏ, ஷபையோரே! அந்த மாபெரும் பள்ளத்தை செங்கோல் பிடித்திருக்கும் நம்ம சுதந்திர சர்க்கார் கொஞ்சம் கொஞ்சமாகத் தூர்த்துக் கொண்டுவந்து விட்டது!...இப்போது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது, அங்கே பள்ளமில்லை; மேடு தெரிகிறது; அந்த மேட்டின் உச்சியிலே சுதந்திர தீபம் சுடர்விட்டு ஜெக ஜோதியாய் பிரகாசிக்கிறது! இந்த பிரபஞ்சத்துக்கெல்லாம் 'லைட்' டைத் தருகிறது...”

—என்று கொஞ்ச நாட்களுக்கு முன்புதானே தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த ஒருவர் கூறிவிட்டுப்போனார்! அவர் ஓட்டுக்காக மட்டும் பேசவில்லை; எனக்காகவும் பேசினார்; வள்ளிக்காகவும் பேசினார்! 'ஜாதி ஏது?' என்று சாடினாரே; 'ஒழித்து விட்டோம்' என்று எக்காளமிட்டாரே; ஏன் வள்ளி மட்டும் அதையே திருப்பித் திருப்பித் சொல்கிறாள். மேட்டின் உச்சியிலே சுதந்திர தீபச் சுடர்விட்டு ஜெகஜோதியாய் பிரகாசிக்கிறது...இந்த பிரபஞ்சத்துக் கெல்லாம் 'லைட்' டைத் தருகிறது—என்று முழங்கினாரே-என் வள்ளி மட்டும் எந்த இருளிலே மறைந்துபோனாள்?

அந்த ஜோதி வள்ளியைத் தேடிப் பிடித்துத் தரவில்லையே!...

'சாதி இரண்டொழிய வேறில்லை......' என்று ராகம் போட்டுப் பள்ளியிலே பாடியிருக்கிறேன் நான். ஔவைப் பாட்டியின் அந்தப் பொன்மொழிகள்கூட வள்ளிக்குத் தெரியுமே; என் தங்கைக்கு நான் சொல்லித் தந்திருக்கிறேனே!

நான் என்ன செய்வது? அழுகிறேன்-அழாமல் சிரிக்கவா முடியும்? சிரிக்காமல்; சிரிக்கலாம்—அப்படியானால் நான் பைத்தியமாகிவிடவேண்டும்!... அல்லது நான் இப்போது பைத்தியமாகத்தான் மாறிவருகிறேனா?

அதோ ஆற்றங்கரை மணல் மேடு...வள்ளி அழகாக மண் வீடு கட்டுகிறாள்; கஷ்டப்பட்டு கட்டுகிறாள். எத்தனை முறை தான் இடிந்து இடிந்து விழுகிறது, அந்த மண் மாளிகை! நான் பக்கத்தில் உட்கார்ந்து பார்த்துச் சிரித்துக்கொண்டே இருக்கிறேன்...என்ன இது?... திடீரென்று ஒரு முரட்டுக் கால் அந்த வீட்டை மிதித்துத் துவைத்து விட்டு ஓடுகிறதே! அதுமட்டுமா? ஓடியபோது கிளம்பிய மண் குவியல் வள்ளியின் கண்களில் அப்பிக்கொள்கிறது...வள்ளி அலறுகிறாள்...

ஆலமரத்து நிழல்தானே நான் தங்கைக்குப் 'பாரி மிட்டாய்' தருகிற இடம்...அதோ, வள்ளி ஆலம் விழுது ஊஞ்சலிலே நின்று ஆடிக்கொண்டிருக்கிறாள். நான் கீழே நின்று ஊஞ்சலைத் தள்ளிக் கொண்டிருக்கிறேன், ஆனால் திடீரென்று என்ன அலறல் அது? “அண்ணா, அண்ணா!” என்று வள்ளியின் கோர அழுகுரல் எழுகிறதே! ஐயோ....ஆலம் விழுதைக் கோடாரியால் வெட்டி விட்டு ஓடுகிறான் ஒரு கொடியவன்!...பள்ளத்திலே விழுந்து, உருண்டு, புரண்டு ஓடிக்கொண்டிருக்கிறாள் வள்ளி!...

நான் 'வள்ளி' என்று அலறுவேன்—நள்ளிரவில் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டிருப்பேன். பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருப்பேன். எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை. கிரிக்கெட் மட்டை இரும்புபோல் கனத்தது; கோலிக் குண்டு அணுகுண்டாக பயமுறுத்தியது!.....

நான் உங்களைத்தான் கேட்கிறேன்—நீங்கள் சொல்லுங்கள்; தேடிப் பார்த்துச் சொல்லுங்கள்; வள்ளி எங்கே?....

நான் தேட முடியாது! ஏன் தெரியுமா? நான் வெளியே போகக் கூடாது! எனக்குக் காவல்—கடுமையான காவல்! வெளியே தலை நீட்டினாலும் என் தலை போய் விடுமாம்—தந்தையின் எச்சரிக்கை அது!

ஊரிலே கொலை நடக்கிறதாம்—கொள்ளை நடக்கிறதாம். வாழப் பிறந்தவர்களின் தலைகள்-கைகள்-கால்கள் எல்லாம் வாழை மரத்தைப்போல சீவி எறியப்படுகிறதாம்! ஏன்? இதற்கெல்லாம் யார் காரணம்? அவன் தான்—வள்ளிகூட அடிக்கடிச் சொல்லி அஞ்சுவாளே; அவன்தான்—அந்தக் கொடிய நெஞ்ச 'ஜாதிஅரக்கன்' தான்!

ஊரிலே இரண்டு ஜாதிக்காரர்கள்—இருவருக்கும் பகை! நெருப்பும் பஞ்சும் போலவாம்! அந்தப் பகையால் பலன் அடைபவர்கள் துரோகக் காற்றை ஏவிவிட்டார்களாம்—நெருப்பும் பஞ்சும் நெருங்கினால் பின் என்னவாகும்? தீ...பெருந்தீ!...

“அந்தக் குடிசைக்கெல்லாம் தீ வைத்து பத்து நாட்களாச்சே! களத்துமேட்டு பள்ளச் சேரி ஜனங்கள் பஸ்பமா போயிட்டாங்களே!”

நான், “ஐயோ!” என்று என்னையும் மீறி அலறிவிட்டேன்.

மாடி அறையிலே பதுங்கிக் கிடந்த எனக்கு என் வீட்டுக்குள்ளேயே எந்தப் பகுதியிலிருந்தோ இந்தக் குரல் காதில் பட்டது. களத்துமேடு—பள்ளச்சேரி—தீ—பஸ்பம்—நான் மறுபடியும் அலறினேன். “ஐயோ, வள்ளி!” என்ற கூக்குரல் என் தொண்டைக்குள்ளேயே அடங்கி விட்டது! நான் நினைவிழந்து கீழே சாய்ந்தேன்!

மறுபடி நான் கண்விழித்த போது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. என் உள்ளம் இருண்டு கிடந்ததை அது எடுத்துக் காட்டிற்று. என் கண் முன்னே ஒரே புகை மண்டலம்-பனி மூட்டம்! அதிலே என் கண்கள் வள்ளியைத் தேடின. அகக் கண்களுக்குள் அகப்படாத அவள் என் புறக் கண்களுக்கு மட்டுமே தெரிந்தாள், தாயவளாய்—உடன் பிறவாத உயிர்த் தங்கையாய்—'ஜாதி அரக்கனை'க் கண்டு நடு நடுங்கும் சிறுமியாய்!

நான் என்ன செய்வேன்?

அறையிலிருந்து வெளியேற வேண்டுமென்று எண்ணினேன். பணியாட்கள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள், நான் பயந்தபடியே—ஆனால் தடையேதுமின்றி எங்கள்

[தொடர்ச்சி பக்கம்—10]



எழுத்தாணி

பி. கே. கோதண்டராமன்;
சிவகங்கை

(?) மேல் சபைத் தேர்தலில் காங்கிரசும், தி. மு. கழகமும் கூட்டு சேர்ந்து பி. டி. இராசனை வெற்றிபெறச் செய்ததாக ஒரு சில சந்தர்ப்பவாதிகள் கூறுகிறார்களே...அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

கூறுபவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்று நீங்களே குறிப்பிடுகிறீர்கள்...பிறகு ஏன் இதற்கு விளக்கம்? பி. டி. இராசனை தி. மு. கழகம் ஆதரித்தது உண்மை. கழகத்தின் 15 ஓட்டுகளைத் தவிர மேலும் கிடைத்த ஓட்டுகள் அவருக்குக் காங்கிரசிலிருந்து கிடைத்ததோ; அல்லது காங்கிரஸ் சீர்திருத்தக்காரர்களிடமிருந்து கிடைத்ததோ; யார் கண்டது? தேசிய கௌரவ அவமதிப்புத் தடைச் சட்ட ஓட்டெடுப்பின்போது மட்டும் காங்கிரசோடு சீர்திருத்த காங்கிரசாரும், கம்யூனிஸ்டுகளும் கூடிக் குலாவினார்களே; அது மாத்திரம் "உறவு" அல்லவோ?...வெட்கம்! வெட்கம்!!

ம. ச. உ. கண்ணன்;
புரசைவாக்கம்

(?) மேல்சபைத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் கட்டிப் புரண்ட காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியில் உள்ள ஏழைகள்—நிலப்பிரபு அல்லாதவர்கள் யார்? யார்?

வீ. கே. ராமசாமி முதலியார், சிவகங்கை ஜெமீன்தார், வெங்கடகிருஷ்ண ரெட்டியார், வடமதுரைத் தொகுதியில் வெற்றி பெற்ற இன்னொரு ஜெமீன்தார்-இன்னோரன்ன பலர்!

சுப்பையா; மதுரை

(?) "மேல் சபைத் தேர்தலில் தி. மு. கழகம் நிலப்பிரபுவான பி. டி. ராசனை ஆதரித்தது நியாயமா?" என்று கம்யூனிஸ்டு பத்திரிகை எழுதியிருக்கிறதே; படித்தீரா?

அப்படியா? அட அநியாயமே! அந்த நிலப்பிரபுவின் தலைமையில்தானே பிப்ரவரி 20–ம் நாள் தேவிகுளம், பீர்மேடு பிரச்சினைக்கான கூட்டணியில் கம்யூனிஸ்டுகளும் திரண்டு நின்றார்கள்.

அதுமட்டுமல்லவே—மேல் சபைத் தேர்தலில் கம்யூனிஸ்டு ஆதரவு பெற்ற காங்கிரஸ் ஜனநாயக சீர்திருத்தக் கட்சியின் தலைவர் நிலச் சட்டங்களை ஆதரிக்கிறாரா என்று கேட்டுப் பாருங்கள். அதன் தலைவர் வி. கே. ராமசாமி (முதலியார்) நிலப்பிரபு அல்லவா என்பதையும் அந்தப் பரந்த கண்ணோட்டக்காரர்களிடம் கேட்டுப் பாருங்கள்! திருச்சி மாவட்ட மிராசுதார் சங்கத் தலைவர் டாக்டர் மது ரம் அவர்களை சென்ற பொதுத்தேர்தலிலும் இந்தப் பொதுத் தேர்தலிலும் ஆதரித்துப் பணம் பெற்ற கம்யூனிஸ்டுகள் "கற்புத்தனம்" வேறு பேசுகிறார்களா?

வ. அழகப்பன்;
சோமரசம்பேட்டை

(?) டி. டி. கே. மேலும் வரி விதிப்பாரா?

பாவம்; அவருக்குத்தான் அமெரிக்கா வரிபோட்டு அனுப்பிவிட்டதே! அதன் விளைவு அடுத்த 'பட்ஜெட்'டிலே எதிரொலித்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இரா. இராமசாமி; ராசிங்கபுரம்

(?) தென்னாட்டு அரசியல் ஞானி யார்? வடநாட்டு அரசியல் ஞானி யார்?

துறவு பூணுவதுதான் ஞானத்தின் விளைவு என்றால் தென்னாட்டு அரசியல் ஞானி ஆச்சாரியார்; வடநாட்டு அரசியல் ஞானி ஜெயப்பிரகாஷ் நாராயணன்!

இ. அமீது சுல்தான்;
தோப்புத்துறை

(?) அரிசிப் பஞ்சம் வரக்கூடும் என்பதற்காக ஆகாரத்தைக் குறைத்துச் சாப்பிடச் சொல்லும் பண்டித நேரு தனது ஆடம்பரமான விருந்துகளைக் குறைத்துக் கொள்வாரா?

அதெப்படிக் குறைத்துக் கொள்வார்; அப்பேர்ப்பட்ட விருந்துகளை நம்பி எத்தனை பேர் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள் தெரியுமா?

சுதாகர்; பம்பாய்

(?) லால்பகதூர் சாஸ்திரிக்கும், ஜகஜீவன்ராமுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஜகஜீவன்ராம் கொஞ்சம் புத்திசாலி! இல்லாவிட்டால் சென்ற ஆண்டு இதே தேதியில் ஏற்பட்ட ஒரு விபத்தைக் காரணம் காட்டி சாஸ்திரியார் பதவியை ராஜிநாமா செய்ய; பயங்கரத்தில் அதற்கு எந்த விதத்திலும் குறைச்சலில்லாத இந்த விபத்து ஏற்பட்டும் ஜகஜீவன்ராம் பதவி நாற்காலியில் ஒட்டிக் கொண்டிருப்பாரா?

—அதனால்தான் மிகவும் தந்திரமாகக் கொள்ளைக் கூட்டத்தினர் செய்த சதி — என்னும் குற்றச் சாட்டைத் தயாரித்து விட்டுப் பத்திரமாக வீற்றிருக்கிறார் ஜகஜீவன்ராம்!

சு. தே. சிகாமணி; பெங்களூர்

(?) முன்பு அரியலூர் ரயில் விபத்தின்போது லால்பகதூர் சாஸ்திரியார் பதவியை ராஜிநாமா செய்தாரே; இப்போது அதேபோல் பம்பாய் அருகில் ரயில் விபத்து ஏற்பட்டும் ஜகஜீவன்ராம் ஏன் ராஜிநாமா செய்யவில்லை?

முன்பு பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது; பொது மக்களிடம் 'ஓட்டுப் பிச்சை' கேட்கப் போகும் போது அவர்களிடையே பரபரப்பு ஊட்டுவதற்காக ஒரு 'ஸ்டண்ட்' தேவையாக இருந்தது. இப்போது அது தேவையில்லையே; பொதுத் தேர்தலுக்கு இன்னும் நான்கு ஆண்டுகள் இருக்கின்றன, நண்பரே!

முரசொலி பொங்கல் மலர்

★

எண்ணங்களை எழுதுங்கள்!

முரசொலி பொங்கல் மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம். அதன் சிறப்புகள் என்ன; என்ன—என்ற விளக்கங்கள் தரத் தேவையில்லையென்றே கருதுகிறோம்.

"முரசொலி — பொங்கல் மலர்"—இந்தச் செய்தியே உங்களுக்கு இனிப்பூட்டக்கூடியது—மலர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணங்களை எழுதுங்கள் — இயன்றவரை செயலாற்றி உங்கள் சிந்தை மகிழ வைக்கிறோம்—அத்துடன்,

மலர் எவ்வளவு ரூபாய் விலையில் வெளியிடலாம் என்ற கருத்தையும் உடன் எழுதுங்கள்-இது மிக முக்கியம். உடன் தெரிவியுங்கள்.

[கடிதம் எழுதுவோர் முழு முகவரி தர வேண்டுகிறோம்.]

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்
"முரசொலி"
சென்னை—6

"சுருளிமலை" விற்பனையாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

'சுருளிமலை' தொடர்கதை ஆரம்பமாகும் இதழிலிருந்து 'முரசொலி' அதிகப் பிரதிகள் தேவை என்று கடிதங்கள் வந்திருக்கின்றன. ஆனால் கூடுதலாகத் தேவைப்படும் பிரதிகளுக்கு அதற்குரிய முன்பணத் தொகையையும் அனுப்ப வேண்டுகிறோம்.

முன்பணம் அனுப்பாமல் அதிகப் பிரதிகள் கேட்பவர்க[illegible] சயம் அனுப்ப இ[illegible] தைத் தெரிவித[illegible] கொள்கிறோம்.

வருந்துகிறோம்

மாயூரம் நகர தி. மு. க. செயலாளர் தே. மு. என். கிட்டப்பா அவர்களின் தந்தையார் நடேசன் அவர்கள் 19-11-57 அன்று இயற்கை எய்தினார்கள் என்பதறிந்து மிகவும் வருந்துகிறோம். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

நீதிபதிகளான திரு. கோவிந்த மேனன் அவர்களும் திரு. பி. என். இராமசுவாமி அவர்களும் "புத்ராகிதத்தின் மூலம் வருகிற வருமானம் குடும்பத்தின் பொதுச் சொத்தாகாது. அதை சம்பாதித்தவருக்கே சாரும்" என்று தீர்ப்பு கூறினர். இத்தீர்ப்புக்கு ஆதாரமாக மனுஸ் மிருதியின் 206—வது சுலோகம் எடுத்துக் காட்டப்பட்டதாம்.

பண்டிதர் பகட்டு மொழி பேசிப் பயனில்லை. அதைச் செயலில் காட்டும் துணிவு வேண்டும். "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" என்ற வள்ளலார் வாக்கு, மக்கள் வாழ்க்கையிலே கடைப்பிடிக்கும் நெறியாக வேண்டும். பேச்சாலோ மேல் பூச்சாலோ பிரச்சினை தீராது. 'செய்—அல்லது செத்து மடி' என்ற பண்டிதரின் சித்தாந்தம், இத்துறையிலே பயன்பட வேண்டும். சமுதாயத்தையே மாற்றியமைக்கும் பெரியதொரு புரட்சிக்காக நம்மையே நாம் தயார் செய்து கொள்ள வேண்டும்.

புரட்சி வெல்க! புதுமை மலர்க!

—நாஞ்சில் செ. அன்பெழில்

உரிமையாளரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை